பக்கங்கள்:-பத்து
Registered as a News paper in Sri Lanka
விலை ரூபா. 6.00

# வலம்புரி
Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி 03 திங்கட்கிழமை (20.10.2003) தொலைபேசி - 2223378 ஒலி 305

துரித தபால்.பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்;பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

# புலிகளுக்கு ஆயுதம் ஏற்றி வந்த கப்பல் கண்காணிப்புக் குழுவால் தப்பியது!

## கடற்படைத் தளபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த 16-ம் திகதி வியாழன் இரவு புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்று சுற்றிவளைக்கப்படவிருந்த வாய்ப்பைக் குழப்பியதாக கண்காணிப்புக்குழுவினரை கடற்படை குற்றஞ்சாட்டியுள்ளது. இக் கப்பல் தொடர்பாக மேற்படி குற்றச்சாட்டு கடற்படைத் தளபதி தயாசந்தகிரியால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அன்றைய கடற்படைச் சம்பவம் தொடர்பான முழு விபரத்தையும் தமக்கு அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதியே கேட்டிருந்தார். ஜனாதிபதிக்கு அறிக்கையையனுப்ப முன்னர் கடற்படைத் தளபதி தனது அலுவலகத்தில் அதிகாரிகளுடன் உயர்மட்ட மாநாடொன்றை நடத்தியிருந்தார்.

கடற்படையினரது நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் புலிகளுக்கு முன்கூடியே கிடைத்தன என்று அவர் அங்கு தெரிவித்தார். இதனாலேயே இக் கப்பல் விரைவில் அங்கிருந்து தப்பியோடி மறைந்து விட்டது. விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்று முல்லைத் தீவுக் கரையைநோக்கி சென்று கொண்டிருப்பதாக கடந்த வியாழனன்று மாலை திருகோணமலை கடற்படைத் தலைமையகத்திற்கு தகவல் கிடைத்தது. அப்போது கப்பல் முல்லைத்தீவுக்கு கிழக்காக 250 மைல்கள் தொலைவில் நின்று கொண்டிருந்தது. இதேவேளை இதனைக் கண்காணிப்பதற்கு விமானப் படையினரது உதவியை கடற்படை நாடியது. சந்தேகத்திற்கிட

(10ம் பக்கம் பார்க்க)

## செய்தியாளர்களுக்கு புலிகள் விளக்குவர்

(கிளிநொச்சி)

அயர்லாந்து,டென்மார்க், நோர்வே ஆகிய நாடுகளுக்குத் தாம் மேற்கொண்ட விஜயம் தொடர்பாக செய்தியாளர்களுக்கு. விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடொன்றை அடுத்த வாரம் கிளிநொச்சியில் நடத்தவுள்ளதாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

இச் செய்தியாளர் மாநாட்டில் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கான இடைக்கால நிர்வாக சபை குறித்த திட்டவரைபு மற்றும் ஸ்கன்டினேவிய நாடுகளுக்கு மேற்கொண்ட விஜயம் தொடர்பாகவும் விளக்கிக் கூறப்படவுள்ளது. (ம)

# விடுதலைப் புலிகள் வடக்குக் கிழக்கில் தனிநாட்டை அமைத்து விட்டார்கள்

## சிங்கப்பூரில் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

**போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட உடனேயே புலிகள் வடக்குக் கிழக்குத் தனிநாடு ஒன்றை நடைமுறையில் ஏற்படுத்தி விட்டார்கள். இவ்வாறு சிங்கப்பூர் சென்றிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.**

பேச்சுக்கள் பற்றிய உறுதி நிலைப்பாடு ஒன்று இல்லாமலேயே இடைக்கால நிர்வாகத்தைப் புலிகள் கோருகின்றார்கள். கிழக்காசியாவுக்கான உலகப் பொருளாதார உச்சி மாநாட்டில் உரையாற்றிய பின்னர் உயர் வர்த்தக, அரசியல் தலைவர்கள் மத்தியில் அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் பேசுகையில், முன்னர் 6 ஆயிரம் பேராக இருந்த புலிகள் கடந்த 2 வருடங்களில் 20 ஆயிரம் பேராக தம்மைப் பலப்படுத்தியுள்ளார்கள். தற்போது தனி

(10ம் பக்கம் பார்க்க)

## வயலின் இசைச் சக்கரவர்த்தி குன்னக்குடி வைத்தியநாதன் வெள்ளியன்று யாழ்.வருகிறார்

(யாழ்ப்பாணம்)

வயலின் வாத்திய இசை மேதை குன்னக்குடி வைத்தியநாதன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தீபாவளித் தினத்தன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணம் வருகை தரும் அவர் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினால், தீபாவளித் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விஷேட நிகழ்வில் வயலின் இசைக் கச்சேரியை நிகழ்த்தவுள்ளார்.

நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் தீபாவளித்தினத்தன்று மாலை 5.30 மணிக்கு விஷேட நிகழ்வு ஆரம்பமாகும். இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வயலின் இசைச் சக்கரவர்த்தி குன்னக்குடி வைத்தியநாதன் மூன்று மணி நேரம் வயலின் இசை மழை பொழியவுள்ளார்.

தமிழ்நாடு பசும்பொன் மாவட்டத்தில் பிறந்த இவர், தமிழ் நாடு மழையின்றி வரண்டு போய்க் கொண்டிருந்த நேரத்தில் வருண பகவானைத் துதித்து மழைக்குரிய இராகத்தை வாசித்து மழை பொழிய வைத்த பெருமைக்குரியவர். அப்போது முதலமைச்சராக இருந்த

(10ம் பக்கம் பார்க்க)

## வதிரிப் பகுதியில் போராளி கைது

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி வதிரியில் விடுதலைப் புலிகளின் கடற்புலி உறுப்பினர் ஒருவர் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இவர் பருத்தித்துறை மாவட்ட நீதிவான் க.அரியநாயகம் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

அவரை எதிர்வரும் 29-ந் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த)

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் தமிழ்ச்செல்வனை சந்திப்பர்

(கிளிநொச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருக்குமிடையிலான விசேட சந்திப்பொன்று நாளை மறுதினம் புதன்கிழமை கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

இச் சந்திப்பிற்கான அழைப்புக் கடிதம் தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

## 6 அம்சக் கோரிக்கையை முன்வைத்து

## ஆசிரியர்கள் நாளை அடையாள வேலை நிறுத்தம் செய்வர்

(கொழும்பு)

சம்பள உயர்வு உட்பட 6அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நாளை செவ்வாய்க்கிழமை ஆசிரியர்கள் அனைவரும் நாடளாவிய ரீதியில் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்த்து வைக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்குப் பலமுறை அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்ட போதிலும் இன்று வரை அவ் அறிவுறுத்தல்களுக்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இதனால் நாடளாவிய ரீதியில் அனைத்துப் பாடசாலை ஆசிரியர்களும் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக ஐக்கிய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பல்வெல்ல பிரஞ்ச சேகர தேரர் அறிவித்துள்ளார்.

இதேவேளை பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் கோரிப் போராட்டம் நடத்தி வருகின்றமை தெரிந்ததே. (தி-18)

## இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைக்கு எந்தவொரு தீர்வையும் சர்வதேசம் முன்வைக்காது!

## ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

**இலங்கையில் நிலவுகின்ற இனப்பிரச்சினை உள்நாட்டுப்பிரச்சினையாகும். அதனை அவர்களே தீர்த்துக் கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் எந்தவொரு தீர்வையும் சர்வதேச சமூகம் பலாத்காரமாக மக்கள் மீது திணிக்கமாட்டாது. இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் வோல்டவூட்டர் தெரிவித்துள்ளார்.**

இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு மட்டக்களப்பு,அம்பாறை மாவட்டங்களுக்குச் சென்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் அங்கு பலதரப்பட்டவர்களுடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்ட பின் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தூதுவர் வோல்டவூட்டர் தனது மட்டக்களப்பு அம்பாறை விஜயத்தின் போது தமிழ், முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளையும், மட்டக்களப்பு ஆயர் வணக்கத்துக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, மட்டக்களப்பு அரச அதிபர் இ.மோனகுருசாமி மற்றும் படைஉயர் அதிகாரிகளையும் சந்தித்து தற்போதைய உள்நாட்டு விவகாரம் தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டார்.

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஸ்ரீ.சு.க. ஆர்ப்பாட்டத்துக்கு இ.தொ.கா.கண்டனம்

(கொழும்பு)

தீபாவளி தினத்தன்று ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவது என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எடுத்த தீர்மானத்தை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக கட்சி விடுத்துள்ள அறிக்கையில்,

சுதந்திரக்கட்சியின் இத்தகைய கீழ்த்தரமான அரசியல் பிரசார நடவடிக்கைகளை பொது மக்கள் அலட்சியம் செய்து விடவேண்டும்.

சுதந்திரக்கட்சி இந்து மக்களின் முக்கிய பண்டிகைக்காலத்தில் ஆர்ப்பாட்டப்பேரணியை நடாத்தத் திட்டமிட்டுள்ள செயல் மதங்களுக்கிடையிலான வன்முறையைத் தூண்ட வழிவகுக்கும்.

அத்துடன், இச்செயல் சிறுபான்மை இன மக்களின் தேவைகளையும், உணர்வுகளையும் மதித்து நடக்கவில்லை என்பதையே சுட்டி நிற்கிறது.

இதனால் இவ் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்துவது என்ற தீர்மானத்தை சுதந்திரக்கட்சி கைவிட வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-60)

# முஸ்லிம்களின் அபிலாஷைகள் குறித்து மனம் விட்டுப் பேசவேண்டும்

## கிழக்குப் பல்கலை துணை வேந்தர் தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம்கள் ஒரே குரலில் தமது அபிலாஷைகளையும் எதிர்பார்ப்புக்களையும் பூர்த்தி செய்து கொள்ளும் வகையிலான கருத்துக்களை உருவாக்கி தமிழினத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் குழுவிடம் மனம் விட்டுப் பேச வேண்டும் என கிழக்குப் பல்கலைக் கழக துணை வேந்தர் எம்.எஸ்.மூக்கையா தெரிவித்துள்ளார்.

'இனப்பிரச்சினைத் தீர்வில் ஊடகவியலாளரின் பங்கு' என்ற தலைப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், ஐரோப்பிய யூனியனும் இணைந்து நேற்று முன்தினம் ஓலுவில் மகாபொல பயிற்சி நிலையத்தில் நடத்திய ஒருநாள் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்;

முஸ்லிம்களும் தமிழினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவினரும் அர்ப்பணிப்புடனும் விட்டுக் கொடுப்புடனும் மனந்திறந்து கலந்துரையாட வேண்டும். இவர்கள் இரு தரப்பினரும் தமது கருத்துக்களை புதுக் கொள்கையாக வடிவமைத்து அரசுடன் பேரம் பேசுவதன் மூலம் நிச்சயமாக ஒரு முடிவுக்கு வர முடியும்.

முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி ஆகிய இரு கட்சிகள் இருந்தும் அம் மக்களின் அபிலாஷைகளையும், எதிர்ப்பார்ப்புக்களையும் சுட்டிக் காட்டக் கூடிய ஒரு தீர்க்க முடிவை எடுக்கக் கூடிய திறன் இரு கட்சிகளுக்கும் இல்லை.

இதற்குக் காரணம் இவ்விரு கட்சிகள் இடையேயும் நிலவும் உட்பூசல்கள்தான். எனவே கட்சிகள் இரண்டும் உட்பூசல்களை மறந்து மக்களின் அபிலாசைகளைத் தீர்த்து வைக்கக் கூடிய வழிவகைகள் குறித்து ஆராய வேண்டும் எனவும் துணைவேந்தர் கேட்டுக் கொண்டார். (தி-61-10)

## மாணவர்களுக்கு எழுத்தறிவூட்டல்

(வசாவிளான்)

குட்டியப்புலம் அ.த.க.பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களில் எழுத்தறிவில் பின்தங்கிய மாணவர்களுக்கான எழுத்தறிவூட்டல் வகுப்புகள் தற்போது நடாத்தப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த அனர்த்த நடவடிக்கைகளால் மேற்படி பகுதியிலுள்ள மாணவர்கள் தமது கல்வியை உரிய வகுப்புகளில் முழுமையாக பெற்றுக் கொள்ள வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (பி-72)

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் ஆணையாளர்களை அதிகரிக்க பாராளுமன்றில் திருத்தச் சட்ட மூலம்

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் செயற்பாடுகளை துரிதப்படுத்தும் வகையில் அதில் அங்கம் வகக்கும் ஆணையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று பாராளுமன்றத் தெரிவுக்குழு செய்த சிபார்சுக்கு அமைய இது விடயம் தொடர்பான திருத்தச் சட்ட மூலம் அமைச்சரவை அங்கீகாரத்திற்காக நாளை மறுதினம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதுவரை காலமும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் 3ஆணையாளர்கள் அங்கம் வகித்து வந்தனர். அவர்களில் ஒருவர் இறந்துள்ளதால், தற்போது இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் இஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

சிரமங்களை நிவிர்த்திசெய்யும் முகமாக ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் ஆணையாளர்களின் எண்ணிக்கையை 3இல் இருந்து 5ஆக உயர்த்த வேண்டும் என்ற திருத்தச் சட்ட மூலமே பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் இத் திருத்தச்சட்டமூலம் சமர்ப்பிக்கப் பட்டபோதிலும், இது விடயம் குறித்து பிரதமரோடு தான் கலந்தாலோசிக்க வேண்டியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்ததை அடுத்தே இச்சட்ட மூலம் ஒரு வாரத்திற்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (தி-18)

## கருத்தரங்கு

(சங்கானை)

வலிகாமம் கல்வி வலயத்திற்குடபட்ட பாடசாலைகளில் பணியாற்றும் ஆய்வுகூடப் பணியாளர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான ''செயற்திறன் விருத்தி'' தொடர்பான கருத்தரங்கொன்று எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (தி-34)

# சுதந்திரக்கட்சியுடன் இணைந்து சோசலிஸத்தை உருவாக்க முடியாது

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து சோசலிஸத்தை உருவாக்க முடியாது என ஜே. வி. பியின் பிரசாரச் செயலாளரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் நடைபெற்ற ஜே.வி. பி. பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தா.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரி பால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஜே.வி. பியினர் முன்வர வேண்டும் என கடித மூலம் அழைப்பு விடுத்திருந்தார்.

அந்தக்கடிதத்தில் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான திகதிகளையும் ஏனைய விடயங்களையும் தொலைபேசி மூலம் தமக்கு அறிவிக்குமாறும் கேட்டிருந்தார். கட்சியின் இந்தச் செயல் எமக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

இலங்கையின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவே நாம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து ஒரே சின்னத்தின் கீழ் போட்டியிட பேச்சுவார்த்தைகளை முன்னர் நடத்தி வந்தோம்.

ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கடசியில உள்ள சிலர் சதி செய்து இந்த பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டை போட்டுவிட்டனர்.

எனவே இனியும் இவர்களுடன் இணைந்து சோசலிஸத்தை உருவாக்குவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (தி-63,10)

# ஆஸி .அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஒரு நாள் சர்வதேச போட்டியில் பங்கேற்கார்

சிம்பாவே அணிக்கெதிராக சிட்னி விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் 2ஆவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் 2ஆம் நாள் ஆட்டநேர முடிவின் போது அவுஸ்திரேலிய அணி 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து அதன் முதல் இன்னிங்ஸில் 245 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அவுஸ்திரேலிய அணி சார்பான துடுப்பாட்டத்தில் ரிக்ப் பொண்டின் திறமையாகத் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 137 ஓட்டங்களையும் அணியின் தலைவர் ஸ்ரீவ்வோ ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும் 2வது நாள் ஆட்ட நேர முடிவின் போது பெற்றிருந்தனர்.

இதில் ரிக்ப் பொண்டிங் தனது 18வது டெஸ்ட் சதத்தினை பூர்த்தி செய்திருந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது.

சிம்பாவே அணி அதன் முதல் இன்னிங்சில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 308 ஓட்டங்களை பெற்றது.

இதேவேளை, இந்த டெஸ்போட்டியில் அவுஸ்திரேலிய ஆணியின் வேகப்பந்து வீச்சாளரான பிரெட்லீ உபாதைக் குள்ளானதின் காரணமாக தொடர்ந்து விளையாடமாட்டார்.

என்பதுடன் இம்மாத இறுதியில் இந்தியாவில் நடைபெறவுள்ள மும்முனை ஒரு நாள் சர்வதேச போட்

## விளையாட்டு

டியிலும் அவர் இடம்பெற மாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கிளைன் மெக்ராத், ஜேசன் ஜெலஸ்பி, சுவேட்மைக் கேல் ஆகியோர் உபாதைக்குள்ளாகியிருக்கின்ற நிலையில், பிரெட்லீயும் உபாதைக்கு உள்ளாகியிருப்பது அவுஸ்திரேலிய அணிக்கு பேரிடியாக அமைந்துள்ளது. (தி-68)



இந்த ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர் என்ற விருதை எம்.ரி.வி. அண்மையில் வழங்கியதற்காக அதன் நிகழ்ச்சில் பங்கேறறு நன்றி தெரிவிக்கின்றார் டென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ்.

# ஆஸி .கிரிக்கெட் பயிற்றுநராக மீண்டும் வியூஹனன் நியமனம்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பயிற்றுநராக தொடர்ந்து 2வருடங்களுக்கு கடமையாற்றும் ஒப் பந்தம் ஒன்றில் ஜோன் வியூஹனை கைச்சாத்திட்டுளளார்.

இதன்படி இவர் எதிர்வரும் 2005ஆம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கெதிராக நடைபெறவுள்ள சாம்பல் கிண்ண கிரிக்கெட் தொடர் வரையிலும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பயிற்றுநராக செயற்படுவார் என அறிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த 4வருட காலமாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பயிற்றுநர் பதவியை பொறுப்பேற்று, அதனை வழிநடாத்திவரும் ஜோன் வியூஹனன், இவ்வணியினை சிறந்த பெறுபேறுகள் பலவற்றின் மூலம் உலகின் முதல்தர கிரிக்கெட் அணியாக திகழவைத்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் 2 வருடங்கள் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியினை பயிற்று விக்கக்கூய வாய்ப்பு கிடைத்திருப்பதையிட்டு தான் மிகுந்த மகிழ்ச்சியடைவதாகவும், ஜோன் வியூஹனன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அவுஸ்திரேலிய கிரிகெட் அணியின் வெற்றிக்கு அதிகளவு பங்காற்றியுள்ள ஜோன் வியூஹனனை இவ்அணிக்கு மேலும் 2வருடங்களுக்கு பயிற்றுநராக ஒப்பந்தம் செய்ய முடிந்தமையினையிட்டு அவுஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையும் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளது. (தி-68)

## செய்திகள்

# மண்ணின் பெருமையை நிலை நாட்ட பாக் .அணி தொடரை கைப்பற்றுமா?

லாகூரில் இடம்பெற்று வரும் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிக்கும் பாகிஸ்தான் கிரிக் அணிக்குமிடையிலான 1வது டெஸ்கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 320 ஓட்டங்களைப்பெற்றுக்கொண்டது.

இதில் தென்னாபிரிக்க அணிசார்பாக துடுப்பாட்டத்தில் மார்க் பௌச்சர் 72 ஓட்டங்களையும் கரிகிரிஸ்ரன் 53 ஓட்டங்களையும் தமது அணிக்காக பெற்றுக்கொடுத்துள்ளனர்.

பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் சௌயிப் மலிக் 42 ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றுகளை கைப்பற்றியிருந்தார். இப்போட்டியின் முதல் நாள் ஆட்டம் முடிவிற்குகொண்டு வரப்பட்டபோது, தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 320 ஓட்டங்கள் என்ற இலக்கை எட்டியிருக்கின்றது. தற்சமயம் பாகிஸ்தான் அணி அதன் முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வருகின்றது.

ஏற்கனவே பாகிஸ்தானில் நடந்து முடிந்த 5போட்டிகள் கொண்ட ஒரு நாள் சர்வதேச போட்டித்தொடரை தென்னாபிரிக்க அணி 3:2 என்ற பெறு பேறுகள் அடிப்படையில் பாகிஸ்தானை அதன் சொந்த மண்ணில் வெற்றி கொண்டுள்ளது. இதனை ஈடு செய்ய பாகிஸ்தான் அணி டெஸ் தொடரையாயினும் கைப்பற்றுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும். (உ-68)

# குரங்குபாஞ்சானை அண்டிய பகுதிகளில் முஸ்லிம்கள் விவசாயம் செய்ய அனுமதி

## இருதரப்பு பேச்சுக்களை அடுத்து இணக்கம்

(திருகோணமலை)

திருகோணமலை குரங்கு பாஞ்சான் முகாமை அண்டிய பிரதேசங்களில் முஸ்லிம் விவசாயிகள் விவசாயம் செய்வதற்கு தமிழீழவிடுதலைப்புலிகள் அனுமதிவழங்கியுள்ளனர்.

பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி வரும் குரங்கு பாஞ்சானில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் முகாமினை அண்டிய பிரதேசங்களில் 220ற்கும் மேற்பட்ட முஸ்லிம் விவசாயிகள் பயிர்ச்செய்கை மேற்கொள்வது தொடர்பாக, கிண்ணியா முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும், தமிழீழவிடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான இரண்டாவது சந்திப்பு நேற்று முன்தினம் ஆலங்கேணி சித்தி விநாயகர் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றபோதே விடுதலைப்புலிகள் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளனர்.

திருகோணமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் கோர்ட்ஸ்பேர் தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பில், தமிழீழ விடுதலைப்புலிகளின் தரப்பில் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திலக், உப்பாறு பிரதேச பொறுப்பாளர் விமல், திருமலை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு பொறுப்பாளர் எஸ். தர்மன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முஸ்லிம்களின் தரப்பில் ஜம்மியத்துல் உலாமா சபையினைச் சேர்ந்த, ஆஷிக் ஏ.ஜாபீர், மௌலவி, எம்.வை.ஹதியத்துல்லா, ஏ.ஆர்.எம்.முகைதீன், எம்.ஏ.எம். அஸீஸ், ஏ.எம்.நஸார், ஏ.சி.எம். முஸ்லிஸ் ஆகியோரும் விவசாய சங்கத்தின் சார்பில், இ.எம்.முகைதீன், கே.எம். அப்துல் றகீம், யு.ஏ. ரஸாக், எம்.யு.வதூத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கடந்த 6ஆம் திகதி இது தொடர்பான முதலாவது சந்திப்பு திருகோணமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இடம்பெற்றபோது, குரங்குபாஞ்சானில் உள்ள விடுதலைப்புலிகளின் முகாமில் இருந்து 50 மீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள காணிகளில் முஸ்லிம்கள் விவசாயம் செய்ய விடுதலைப்புலிகள் அனுமதி வழங்கியிருந்தமை தெரிந்ததே.

இதுபற்றி நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் ஆராயப்பட்ட போது ''தமிழீழ விடுதலைப்புலிகள் ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியின் பிரகாரம் குரங்குபாஞ்சான் முகாம் ஊடாகவே முஸ்லிம்கள் விவசாயம் செய்ய வேண்டி இருக்கிறது'' என்ற விடயத்தை முஸ்லிம்கள் தரப்பில் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனையடுத்து, இதற்கு மாற்று ஏற்பாடாக பிரத்தியோக பாதையொன்றை ஏற்படுத்தவும் விவசாயிகள் தங்கள் வேலைகளை இலகுவாக மேற்கொள்ளுவதற்கு வசதியாக தற்காலிக குடிசைகளை அமைக்கவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர். திலக் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இருதரப்பினருக்கும் உள்ள பொதுப்படையான பிரச்சினைகள் தொடர்பாக எதிர் வரும் டிசம்பர் மாதம் 7ஆம் திகதி மீண்டும் சந்தித்துப் பேசுவது எனவும் இங்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது.

(தி-62,10)


கொம்ஸ்ரா – ''KOMSTA''

இலவச மருத்துவசேவை

கொரியன் நாட்டு தேசிய மருத்துவ சேவைக் குழுவினரின் இலவச சிகிச்சை முகாம்.

இடம்:- கைதடி சித்த போதனா வைத்தியசாலை

காலம்:- நவம்பர் 4ம், 5ம், 6ம், 7ம் திகதிகளில் காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை

முற்கூட்டியே பதிவுகளை கைதடி போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளவும்

(C/6757) நிர்வாக அதிகாரி


# ஆளணி பற்றாக்குறையினால் கல்வி நிலை பாதிப்பு

## அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் ஆளணி மற்றும் பௌதீக வளப்பற்றாக்குறை காரணமாக கல்வி நடவடிக்கைகள் தொடர்ந்து பின் தங்கிய நிலையில் இருப்பதாக வடக்கு-கிழக்கு மீளமைப்பு அபிவிருத்தி திட்டப் பணிப்பாளர் ரி. லங்கா நேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடி மத்திய கல்லூரியில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப் பட்ட கலையரங்கு திறப்புவிழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி தொடர்ந்து பேசுகையில்,

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 6ஆயிரம் ஆசிரிய வெற்றிடங்கள் நிலவி வருவதுடன் ஆயிரம் வகுப்பறைக் கட்டடங்களும் அமைக்கப்படவேண்டியுள்ளது.

பல பாடசாலைகளில் போதிய தளபாட வசதி இல்லாமல் மாணவர்கள் பல அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

பல பாடசாலைகள் யுத்தத்தினால் சேதமடைந்துள்ளதால் மாணவர்கள் மர நிழல்களில் இருந்தே கல்வி கற்று வருகின்றனர்.

இத்தகைய அவல நிலை இன்னும் 4 வருடங்களுக்குள் நீங்கி விடும் என குறிப்பிட்ட அவர்,

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள 8 மாவட்டங்களில் அடுத்த 5வருட காலத்திற்குள் 493 திடடங்களை அமுல்படுத்தவுள்ளதாகவும், இதற்காக 2அயிரத்து 600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளாதாகவும் தெரிவித்தார்.

(தி-61,10)

# முஸ்லிம்களின் அபிலாஷைகள் குறித்து மனம் விட்டுப் பேச வேண்டும்

## கிழக்குப் பல்கலை துணைவேந்தர் தெரிவிப்பு

முஸ்லிம்கள் ஒரே குரலில் தமது அபிலாஷைகளையும் எதிர்பார்ப்புக்களையும் பூர்த்திசெய்து கொள்ளும் வகையிலான கருத்துக்களை உருவாக்கி தமிழினத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் குழுவிடம் மனம் விட்டுப் பேசவேண்டும் என கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் எம்.எஸ்.மூக்கையா தெரிவித்துள்ளார்.

''இனப்பிரச்சினைத் தீர்வில் ஊடகவியலாளரின் பங்கு'' என்ற தலைப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் 'மீடியா போரமும், ஐரோப்பிய யூனியனும் இணைந்து நேற்று முன்தினம் ஒலுவில் மகாபொல பயிற்சி நிலையத்தில் நடத்திய ஒருநாள் கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசியபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

முஸ்லிம்களும் தமிழினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவினரும் அர்ப்பணிப்புடனும், விட்டுக் கொடுப்புடனும் மனந்திறந்து கலந்துரையாடவேண்டும். இவர்கள் இரு தரப்பினரும் தமது கருத்துக்களைப் புதுக் கொள்கையாக வடிவமைத்து அரசுடன் பேரம்பேசுவதன் மூலம்நிச்சயமாக ஒரு முடிவுக்கு வரமுடியும்

முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி ஆகிய இரு கட்சிகள் இருந்தும் அம் மக்களின் அபிலாஷைகளையும் எதிர்பார்ப்புகளையும் சுட்டிக்காட்டக் கூடிய ஒரு தீர்க்க முடிவை எடுக்கக் கூடிய திறன் இரு கட்சிகளுக்கும் இல்லை.

இதற்குக் காரணம் இவ்விரு கட்சிகளிடையேயும் நிலவும் உட்பூசல்கள்தான் எனவே கட்சிகளிரண்டும் உட்பூசல்களை மறந்து மக்களின் அபிலாஷைகளை தீர்த்து வைக்கக்கூடிய வழி வகைகள குறித்து ஆராய வேண்டும் எனவும் துணைவேந்தர் கேட்டுக்கொண்டார்.

(தி-61,10)

# பனைஅபிவிருத்திச் சபையின் வெள்ளிவிழாச் சிறப்பிதழ் தொடர்ச்சி...

### இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தியாகராஜா மகேஸ்வரன் பா.உ. அவர்கள் அளித்த வாழ்த்துச் செய்தி

அபிவிருத்திச் சபையாகும். கடந்த 20 ஆண்டுகாலமாக நடைபெற்ற உள்நாட்டுப் போரினாலும் பல ஆண்டுகள் தகுதியற்ற நிர்வாக அமைப்பினாலும் பனை அபிவிருத்திச் சபை குறித்த இலக்கை எட்டமுடியாமல் போனமை துரதிர்ஷ்ட வசமாகும்.

கடந்த அரை நூற்றாண்டு காலமாக எமது மக்கள் அனுபவித்த துயருக்கு முடிவுகாணும் குறிக்கோளுடன் அமைக்கப்பட்ட மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்க அவர்களின் அரசாங்கத்தின் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சுப் பொறுப்பு எனக்கு அளிக்கப்பட்ட பொழுது, பனை அபிவிருத்திச் சபையும் எனது அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. இதன் செயற்பாடுகள் தூய்மையானதாகவும், நிதானமாகவும் சபையின் தலைவர் திரு.பொ.சிவபாதம் அவர்களுடைய வழிகாட்டலில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. அவ்வாறே சபையின் பணிப்பாளர்களும், சபை நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருக்கின்றனர்.

இவ்வாண்டு பனை அபிவிருத்திச் சபை தனது வெள்ளி விழாவை நோக்கிச் செல்கின்றது. வெள்ளி விழாவின் ஓர் அம்சமாக பனை அபிவிருத்திச் சபை நமது நாட்டிற்கு பனையின் முக்கியத்துவம் பற்றி ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது. இக்கருத்தரங்கில் பல்கலைக்கழகங்களையும் பிற நிறுவனங்களையும் சேர்ந்த நிபுணர்கள் ஆராய்ச்சிக் கட்டுரையைப் படிக்கவிருக்கிறார்கள். இதனை ஏற்பாடு செய்த சபையின் பணிப்பாளர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் அவர்களை பாராட்டுகிறேன். இதனைத் தொடர்ந்து பனம் பொருட்காட்சிகள், உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தை ஊக்குவிப்புக்கான பணிகள் முதலானவை முன்னெடுத்துச் செல்லப்படவுள்ளன.

பனை அபிவிருத்திச் சபை நலிவுற்ற மக்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கு மேன்மேலும் பல திட்டங்களை வகுத்துச் செயற்படவேண்டும் என விரும்புகிறேன். இச்சந்தர்ப்பத்தில் பனை அபவிருத்திச் சபையின் தலைவருக்கும் பணிப்பாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் எனது நல்லாசியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தியாகராஜா மகேஸ்வரன் பா.உ.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் கொழும்பு.

### பனை அபிவிருத்திச் சபைத் தலைவரின் ஆசிச்செய்தி

இவ் வெள்ளிவிழா ஆண்டில் இச்சபையின் ஏழாவது தலைவராக நான் நியமிக்கப்பட்டுள்ளமைக்காக இந்து சமய விவகார அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியறிதலுடையதாகும். ஏனெனில் சபையின் செயற்பாடுகளைச் செயற்படுத்துவதற்குப் பெரும் முட்டுக்கட்டையாகவுள்ள நிதி நெருக்கடியினை தீர்ப்பதற்காக அவர் மேற்கொண்டுவரும் முயற்சிகள் யாவற்றையும் நான் பாராட்டவேண்டியவனாக உள்ளேன்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பரந்து செறிந்து வளர்ந்திருக்கும் பனை வளத்தினை மேம்படுத்துவதற்கும் இதனை நம்பிவாழும் மக்களது சமூக பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் அதன் பயன்களை முழுமையாகப் பயன்படுத்த சபை முற்பட்டபோதும், கடந்தகால நாட்டுநிலை காரணமாக அதனை செயற்படுத்த முடியவில்லை.

தமிழ் மக்களின் வாழ்வு மேம்பாட்டிற்குத் தேவையான வளத்தை வழங்கக்கூடிய பனையின் வளத்தை எதிர்காலத்திலாவது முழுமையாகப் பயன்படுத்த சபை சகல முயற்சிகளை மேற்கொள்ளவும், உரிய நோக்கத்தையும் அடையவும் எல்லாம் வல்ல இறைவனின் நல்லாசிகள் சபைக்குக் கிட்டவேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து எனது அன்பான ஆசியை சபைக்கும் அதனை நம்பிவாழும் சமூகத்திற்கும் தெரிவித்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

பொ.சிவபாதம்
தலைவர்.
பனை அபிவிருத்திச் சபை.

### இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் ஆசிச் செய்தி

போராட்டங்களின் மத்தியிலும் தனது அபிவிருத்திப் பணியை தொடர்ந்தும் மேற்கொண்டுவருவது பெருமைக்குரிய விடயமாகும்.

இதன் பணி வருங்காலச் சந்ததியினருக்கும் நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும் ஆக்கபூர்வமானதாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

க.பரமேஸ்வரன்,
செயலாளர்இந்து சமய விவகார
அலுவல்கள் அமைச்சு.



### நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

உணவுகளாகவும் தயாரித்து கண்காட்சி ஒன்றினை வழங்கும் இச்சபையின் சேவை இன்று நம் நாட்டுக்குத் தேவை. வெள்ளிவிழாக் காணும் இவ்வேளை சிறப்பு மலர் ஒன்றும் வெளிவருவதும் பொருத்தமானதே.

இச்சபையின் பணியானது வெள்ளிவிழாவோடு நின்றுவிடாது நூற்றாண்டுகள் பல கண்டு பனைவளம் பற்றி உலகறியச் செய்ய வேண்டும் என வாழ்த்துகிறோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
நல்லை ஆதீனம், நல்லூர்.

### யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரின் ஆசிச் செய்தி

இரசாயனவியல் ஆராய்ச்சிகளையும் பல்கலைக்கழகங்களின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், வடகிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட போர்க்காலச் சூழ்நிலையினாலும் அடிக்கடி இடம்பெற்ற இடம் பெயர்வுகளினாலும் பனை அபிவிருத்திச் சபையானது தனது இலக்கை முழுமையாக அடையவில்லை.

நிதிப்பற்றாக்குறை ஆளணிக்குறைபாடு ஆகிய இடர்பாடுகளின் மத்தியிலும் பனை அபிவிருத்திச் சபையானது இருபத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளமை பாராட்டத்தக்கது. அமைதி நிலவும் தற்போதைய சூழ்நிலையில் அதிக நிதி உதவிகளைப் பெற்று பனையை நேரடியாகவும், மறைமுகமாகவும் தங்கியிருக்கும் மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு பனை அபிவிருத்திச் சபையானது துரித அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கவேண்டும். இம்முயற்சிகளுக்கு யாழ். பல்கலைக்கழகம் மாத்திரமல்ல இலங்கையிலுள்ள மற்றப் பல்கலைக்கழகங்களினதும் ஒத்துழைப்புக்களை பெற்று தருவதற்கு என்னாலான முழு முயற்சிகளையும் மேற்கொள்வேன்.

மேலும், இன்றைய நவீன தொழில்நுட்பயுகத்தில் விஞ்ஞான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பனைவள அபிவிருத்தியை இச்சபை மேற்கொள்ள வேண்டும் என வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பேராசிரியர் சு.மோகனதாஸ்
துணைவேந்தர்.
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

25 வது ஆண்டில்

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு

# பனை அபிவிருத்திச் சபை

## வெள்ளிவிழாச் சிறப்பிதழ் 1978 - 2003

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தியாகராஜா மகேஸ்வரன் பா.உ. அவர்கள் அளித்த

### வாழ்த்துச் செய்தி




இலங்கையின் வடகிழக்கு மாகாணத்தை தொன்று தொட்டு தாயகமாகக் கொண்டுள்ள தமிழ் பேசும் மக்களின் அதி முக்கிய பொருளாதார வளங்களில் பனை ஒன்றாகும். கற்பகதரு எனப்படும் பனை வளத்தில் பன்னெடுங் காலமாகத் தங்கி வாழும் மக்கள் பல்லாயிரம். அவர்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காக 25 ஆண்டுகளுக்கு முன்னர் அரசாங்க நிறுவனமாக தாபிக்கப்பட்டது பனை

(3ஆம் பக்கம் பார்க்க)

நல்லை ஆதீன முதல்வரின்

### அருளாசிச் செய்தி




யாழ்ப்பாணப் பனை அபிவிருத்திச் சபை ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். யாழ். மண்ணில் கற்பக தருவாகத் திகழும் பனை மரத்தின் அருமை பெருமைகளைப் பேணி பாதுகாத்து அதன் பயன்களை உலகறியச் செய்யும் இச்சபையின் பணி மகத்தானது. கற்பனைக்கும் எட்டாத கணக்கு நிறை சேவைகளை அள்ளி வழங்கும் பணியின் தேவைகளைச் சொற்களால் விளக்க முடியாது. அத்தேவைகளை ஒன்றுகூட்டி பல வண்ணப் பொருட்களாகவும்

(3ஆம் பக்கம் பார்க்க)


பனை அபிவிருத்திச் சபைத் தலைவரின்


### ஆசிச் செய்தி




பனை அபிவிருத்திச்சபை 1978ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடம் தனது இருபத்தைந்தாவது ஆண்டு வெள்ளி விழாவினைக் கொண்டாடுகின்றது. இச்சபை ஆரம்பிக்கப்பட்ட போது இதன் முதல் தலைவராக பிரபல தொழிற்சங்கவாதியும் அறிஞருமான திரு கே.சி. நித்தியானந்தா அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுடைய சேவை இச் சபையின் செயற்பாடுகளில் நினைவு கூரத்தக்கதாகும்.


(3ஆம் பக்கம் பார்க்க)
















யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரின்

### ஆசிச் செய்தி



07.08.1978ல் ஸ்தாபிக்கப்பட்ட பனை அபிவிருத்திச் சபையானது இன்று தனது இருபத்தைந்து வருடங்களைப் பூர்த்திசெய்து வெள்ளிவிழா கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஆலோசகராகவும், பொது முகாமையாளராகவும் பனை அபிவிருத்திச் சபையில் கடமையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இக்காலகட்டத்தில் வேலைத்திட்டங்களையும், உற்பத்தி, பயிராக்கவியல், உயிர்

(3ஆம் பக்கம் பார்க்க)



## தனம் தரும் தாலம்

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின்

### ஆசிச் செய்தி



25 ஆண்டுகால வரலாறு காணும் பனை அபிவிருத்திச் சபை இன்று தனது வெள்ளி விழாவினை கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் எனது ஆசிச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற பேருவகை அடைகின்றேன்.

ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் இன்றுவரை சபை ஆற்றிவரும் பணிகளை நான் நன்கு அறிவேன். வடக்குக் கிழக்கில் இரு தசாப்தங்களாக நடைபெற்றுவரும்

(3ஆம் பக்கம் பார்க்க)


**நகர அலுவலகம்**
244., காலி வீதி,
கொழும்பு - 4
தொ. பே. 2586820, 2589185

**பனை அபிவிருத்திச்சபை**
**தலைமை அலுவலகம்**
53, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே. 222 2034

**பிரதேச அலுவலகங்கள்**
மட்டக்களப்பு | கல்முனை
திருகோணமலை | வவுனியா
மன்னார் | புத்தளம்
கிளிநொச்சி | அம்பாந்தோட்டை
முல்லைத்தீவு

விளம்பர அனுசரணை:- பனை அபிவிருத்திச் சபையின் வெள்ளிவிழா சிறப்புற வாழ்த்துகிறோம்

**பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள்**
**சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம்**
**பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**
**யாழ்ப்பாணம்**

# இஸ்ரேலுடன் தற்காலிக யுத்தநிறுத்தம் செய்து கொள்ள பலஸ்தீனம் அக்கறை

## சிரேஷ்ட அதிகாரிகள் அமெரிக்கா பயணம்

(ஜெருசலேம்)

இஸ்ரேலுடன் தற்காலிக யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ளும்நோக்கில் பலஸ்தீனத்தின் கவனம் திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காஸா மேற்குக் கரையில் கடந்த 3வருடங்களாக இடம்பெற்று வரும் மோதல்களைத் தடுத்து நிறுத்தும் வகையிலேயே இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்படவுள்ளதாக பலஸ்தீனத் தகவல்கள் கூறுகின்றன.

இது தொடர்பாக இருதரப்பு பேச்சுக்களை நடத்த பலஸ்தீன சிரேஷ்ட அதிகாரிகள் அமெரிக்காவிற்குச் சென்றுள்ளனர்.

மத்திய கிழக்குப் பிரச்சினைகளில் தற்போது மிகமுக்கியமாகத் தலைதூக்கி நிற்கும் இஸ்ரேல் பலஸ்தீனப் பிரச்சினைகளை முன்னர் தீர்ப்பதற்கு பல முயற்சிகளில் அமெரிக்கா கடும் பிரயத்தனம் எடுத்து வந்த போதும் அதுவெற்றியளிக்காது போனது.

அதுமட்டுமன்றி இஸ்ரேல், பலஸ்தீன தலைவர் யஸீர் அரபாத்தை பதவி விலக்கித் தனிமைப்படுத்துவதன் மூலமே இருதரப்புப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியுமென கூறியது.

இஸ்ரேலின் இக்கருத்திற்கு பலஸ்தீனத்திலிருந்து கடும் எதிர்ப்பு எழுந்தது.

இதனையடுத்து இஸ்ரேல் தமது இப்பிரச்சினைகள் குறித்து மௌனமாக இருந்து வரும் நிலையில் பலஸ்தீனம் தற்போது தற்காலிக யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை இஸ்ரேலுடன் மேற்கொள்ளப் போவதாக கூறியிருப்பது மீண்டும் இஸ்ரேல் பலஸ்தீனமிடையான சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல வழிவகுக்குமென அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இஸ்ரேல், பலஸ்தீனப் போராளிக் குழுக்களிடையேயான மோதல்கள் ஆங்காங்கே தொடர்ந்து இடம்பெற்று வருவதாக செய்திகள் கூறுகின்றன.

(பி-2)

## தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் பதவி விலக்கப்பட்டார்

(சென்னை)

தமிழ்நாட்டின் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் நடராஜனை முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பதவியிலிருந்து நீக்கியுள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் திகதி அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்ட நடராஜன் மீண்டும் சில மாதங்களில் பதவியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

எனினும் அவரைத் தற்போது மீண்டும் பதவியில் இருந்து ஜெயலலிதா நீக்கியுள்ளார்.

இதற்கான காரணம் எதுவும் உடன் தெரிவிக்கப்படவில்லை,

இவரது பொறுப்புக்கள் அனைத்தும், போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆர். விஸ்வநாதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (பி-2)



காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் முதலமைச்சர் முஃபதி முகமது சயீதின் வீட்டின் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் குண்டு பாய்ந்த ராணுவ வீரர் ஒருவர் பிணமாக கிடக்கும் காட்சி.

## சவூதி இளவரசர் பாகிஸ்தான் விஜயம்

(இஸ்லாமாபாத்)

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாட சவூதி இளவரசர் அப்துல்லா பாகிஸ்தான் சென்றுள்ளார்.

இளவரசா, பாகிஸதான ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்புடனும் மற்றும் முக்கிய அமைச்சர்களுடனும் கலந்துரையாடவுள்ளார்.

இதன்போது இந்தியா- பாகிஸ்தான் நிலைமை குறித்தும் ஆராயப்படவுள்ளதென பாகிஸ்தானின் தகவல்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். அமெரிக்கா மீதான தாக்குதலின் பின்னர் கடும் போக்குடைய இஸ்லாமியத் தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கைகளுக்கு இவ்விரு நாடுகளும ஆதரவு வழங்கி வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.(பி)

## ஆயுத விற்பனையில் அமெரிக்கா; வாங்குவதில் சவூதி முன்னணி

(லண்டன்)

உலகில் வேறெந்த நாட்டையும் விட அமெரிக்காவே அதிக ஆயுதங்களை விற்பனை செய்கின்றது. அதேபோல் வளரும் நாடுகளுக்கு ஆயுதங்களை விற்கும் நாடுகளில் அமெரிக்க முன்னணி வகுக்கின்றது.

சர்வதேச கேந்திர ஆய்வு ஸ்தாபனத்தின் அறிக்கையொன்றில் இந்தத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையின்படி ஆயுத விற்பனையின் 40.3 வீத சந்தர்ப்பங்களை அமெரிக்கா கொண்டுள்ளது. சவூதிஅரேபியா 2002 ஆம் ஆண்டு சுமார் 5.2 பில்லியன் டொலரை ஆயுதம் வாங்கப் பயன்படுத்தியுள்ளது.

உலகின் இரண்டாவது மிகப் பெரிய ஆயுத விற்பனையாளராக பிரிட்டன இருக்கின்றது. 4.7 பில்லியன டொலர் பெறுமதியான ஆயுதங்களை 2002ஆம ஆண்டில் பிரிட்டன் விற்பனை செய்துள்ளது. அடுத்தபடியாக ரஷ்யா திகழ்கிறது. (பி)

## முஷாரப்பைக் கொல்ல முயன்ற மூவருக்கு 10 ஆண்டுகள் சிறை

(கராச்சி)

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பைக் கொலை செய்ய முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இஸ்லாமிய போராளிகளுக்கும் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் கராச்சி நகரில் இடம்பெற்ற முக்கிய பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றச் சென்றிருந்த முஷாரப் மீது குண்டுத்தாக்குதல் நடத்த முயற்சித்தார்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு இவர்கள் மூன்று பேர் மீதும் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரணை செய்த கராச்சிநகரில் உள்ள பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான நீதிமன்றம் இவர்கள் மூவரும் குற்றவாளிகள் எனக் கூறி 10 ஆண்டுகள் சிறைத்தண்டனையை விதித்துள்ளது

முஜாகிதின் இயக்கத்துடன் தொடர்புடைய அல்- ஆல்மிபிரிவைச் சேர்ந்த முஹமட் இப்ராஹம், முஹமட்கலீவ், முஹமட் அஸ்ரப் ஆகிய மூவருக்குமே இவ்வாறு சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (பி-2)

# அமெரிக்கா மீது மீண்டும் தாக்குதல் நடத்துவாராம்

## ஒளிநாடாவில் பின்லேடன்

(டுபாய்)

அமெரிக்கா மீது மீண்டும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்த தாம் திட்டமிட்டுள்ளதாக ஒளிநாடா ஒன்றின் மூலம் ஒஸாமா பின்லேடன் கூறியுள்ளார்.

அல்ஜெசீரா தொலைக்காட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஒஸாமா பின்லேடனுடையதாகக் கூறப்படும் ஒளிநாடாவிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாக ரொய்ட்டர் செய்திகள் கூறுகின்றன.

அந்த ஒளிநாடாவில், ஈராக் மக்களை அமெரிக்காவிற்கு எதிராகப் புனிதப் போர் ஒன்றை நடத்துமாறும்,

அமெரிக்கர்கள் ஈராக்கிலிருந்து வெளியேற்றப்படாவிட்டால் அமெரிக்கா மீதும் அதன் நேசநாடுகள் மீதும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது என அச்செய்திகளில் தெரிவிக்கப்படுகின்றது. (பி-2)

## விஸ்வஹிந்து பரிசத் தலைவர் நேற்று விடுதலையானார்

(புதுடில்லி)

லக்னோ விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட விஸ்வ ஹிந்துப் பரிசத்தின் தலைவர் பிரவீன் ரொகாடியா விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அயோத்தியில் இடம்பெறும் இராமர் தரிசனக் கூட்டத்திலும் பேரணியிலும் கலந்து கொள்வதற்காக சென்ற சமயமே இவர் கைது செய்யப்பட்டார்.

இதற்கு ஒரு சிலதினங்களுக்கு முன்னர் அயோத்தியாவில் பேரணியில் ஈடுபட்டிருந்த விஸ்வ ஹிந்துப் பரிசத்தின் தொண்டர்கள் 25 ஆயிரம் பேரை உத்தரப் பிரதேச காவல் துறையினர் கைது செய்திருந்தனர்.

அயோத்தியாவில் இராம தரிசனத்திற்கு குறிப்பிட்ட அளவு பக்தர்களையே அனுமதிக்க முடியும் என்று உத்தரப் பிரதேச முதலமைச்சர் மொலாயன் சிங்யாதவ் கூறியதை எதிர்த்தே விஸ்வஹிந்துப் பரிசத்தின் தொண்டர்கள் பேரணியில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து பொலிஸாருக்கும் தொண்டர்களுக்குமிடையில் கலவரம் ஏற்பட்டதுடன் அப்பகுதிகளில் பதற்ற நிலை அதிகரித்துக் காணப்பட்டது.

தற்போது இப் பதற்றநிலையினைக் குறைப்பதற்காகச் சுமார் 20 ஆயிரம் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (பி-2)

உலக தரிசனம்

## அல்கெய்டா தீவிரவாதிகள் ஜம்முவில் செயற்படவில்லை

## ஜோர்ச் பெர்னாண்டஸ் தெரிவிப்பு

ஜம்மு- காஷ்மீர்ப் பகுதியில் அல்-கெய்டா அமைப்பின் தீவிரவாதிகள் எவரும் இல்லையென இந்தியப் படைத்துறை அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் கூறியுள்ளார்.

பாட்னாவில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய பெர்னாண்டஸ்,

ஜம்மு- காஷ்மீர்ப் பகுதியில் ஊடுருவி வன்முறைகளில் ஈடுபடுபவர்களில் 80 வீதமானவர்கள் வெளிநாட்டுத் தீவிரவாதிகள்.

இவர்கள் அல்கெய்டா அமைப்புடன் தொடர்புபடாதவர்கள்.

பாகிஸ்தானில் பயிற்சி பெற்று இந்தியாவிற்குள் இவர்கள் ஊடுருவி வந்தாலும் இவர்களுக்கு காஷ்மீர் மக்கள் மத்தியில் ஆதரவு எதுவும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(உ-2)

### ஒருவார கால சுற்றுப்பயணமாக

# முதன் முறையாக வெளிநாடுசெல்கிறார் இந்திய குடியரசுத் தலைவர்

(புதுடில்லி)

இந்தியக் குடியரசுத்தலைவர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் ஒருவார கால சுற்றுப்பயணமாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சூடான் மற்றும் பல்கேரியா ஆகிய நாடுகளுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளார்.


அப்துல்கலாம் குடியரசுத் தலைவராகப் பதவியேற்ற பின்னர் வெளிநாடுகளுக்கான விஜயத்தை மேற்கொள்வது இதுவே முதற்தடவையாகும்.

இந்தச் சுற்றுப்பயணத்தின் போது டுபாய் வர்த்தக சங்கத்தின் கூட்டத்தில் அப்துல்கலாம் கலந்து கொள்வார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விஜயத்தை முடித்துக் கொண்டு சூடான் செல்லும் இந்திய குடியரசுத் தலைவர் சூடான் ஜனாதிபதி ஒமர் கர்ஸன் அல் பசீருடன் பேச்சுவார்த்தையொன்றையும் நடத்தவுள்ளார்.

அத்துடன் சூடான் பாராளுமன்றத்திலும் அவர் உரையாற்றவுள்ளார்.

(பி-2)



தைவான் தலைநகர் தைபயில் 101மாடிகளைக் கொண்ட கட்டடம் கட்டும் பணிகள் முடிவடைந்தன. சுமார் 508 மீற்றர் உயரமுள்ள இந்த கட்டடம் தான் உலகிலேயே மிக உயரமான அலுவலக கட்டடம் என்ற பெருமையைப் பெறுகிறது.

# சீன-இந்திய உறவில் ஏற்பட்டுவரும் நெருக்கம்

2வது உலக மகா யுத்தத்தின் போது ஆயிரக்கணக்கான சீனர்கள் ஜப்பானியர்களின் இரசாயன ஆயுதங்களினால் கொல்லப்பட்டமைக்கு ஜப்பானிய பிரதம மந்திரி ஜூனிஜ் ரோகொய்சுமி கவலை தெரிவித்திருக்கிறார்.

இந்தோனேஷியாவிலுள்ள பாலித் தீவில் இடம்பெற்ற ஆஸியான் மகா நாட்டில் கலந்துகொள்ள வந்திருந்தபோதே ஜப்பானிய பிரதமர் இந்தக் கவலையை வெளியிட்டார்.

ஆனால் சீனர்கள் இந்தக் கவலையை அவ்வளவு இலகுவாக எடுத்துக்கொள்வார்களா என்பது தெரியவில்லை.

அண்மையில் சீன உல்லாச விடுதி ஒன்றில் 400 ஜப்பானிய உல்லாசப் பயணிகள் நடத்திய களியாட்டம் சீன அரசையும் சீன மக்களையும் பெரிதும் புண்படுத்தியிருந்தது. அந்த விடுதிச் சம்பவத்தை சீனர்கள் சாதாரண நாட்களில் என்றால் பெரிதுபடுத்தியிருக்கமாட்டார்கள். ஆனால் அது நடைபெற்றிருப்பது ஜப்பானியர் (1931ல்) சீனாமீது படையெடுத்த தினமான செப்டம்பர் 15ம் திகதியாகும். 70 ஆண்டுகளுக்கு முன் ஜப்பானியர் நடத்திய படையெடுப்பைக் குறிப்பிடும் தினத்தில் 400 ஜப்பானியர்கள் 500 சீன விபச்சாரப் பெண்களுடன் களியாட்டம் நடத்தியிருப்பது சீனர்களை அவமானப்படுத்தும் நிகழ்வாக அவர்கள் எடுத்துக்கொண்டுள்ளார்கள். ஒரு நாட்டின் மீது இன்னொரு நாடு புரிந்துவிட்ட வரலாற்று அநீதியை நினைவுபடுத்தும் ஒரு தினத்தில் இவர்கள் அந்த நினைவுப் புண்ணை மேலும் ஆழப்படுத்தும் விதத்தில் நடந்து கொண்டுள்ளார்கள் என்று கருதப்பட்டது.

ஜப்பானிய பிரதமர் இந்தோனேஷியாவில் வைத்து சீன மக்களுக்கு வருத்தம தெரிவித்துக் கொண்டிருப்பதானது முன்பு நடந்துவிட்ட சரித்திர சம்பவத்துக்கு மட்டுமல்ல, அண்மையில் ஹொாங் கொங்கிற்கு அருகில் உள்ள உல்லாச விடுதியில் ஜப்பானியர் நடத்திய களியாட்டத்துக்கும் சேர்த்துத் தான் என்று சீனர்கள் எடுத்துக் கொள்வார்களா என்பது தெரியவில்லை.

ஆஸியான் சந்திப்பின் போது இன்னொரு விடயமும் இடம்பெற்றிருக்கிறது. அதுதான் இந்தியாவின் சிக்கிம் மாநிலம் பற்றியது. சீன வரைபடத்தில் இதுவரை தனி நாடாகக் காட்டப்பட்டு வந்துள்ள சிக்கிம் அந்த நிலையில் இருந்து மாற்றப்பட்டு விட்டதாக சீனப் பிரதமர் இந்தியப் பிரதமர் வாஜ்பாயிடம் தெரிவித்திருக்கிறார். அதாவது சிக்கிமை இந்தியாவின் ஒரு பகுதியாக சீனா அங்கீகரிக்கிறது என்பதே இதன் கருத்து.

தெற்காசியாவில் ஜப்பான் தன்னை பிரபலப்படுத்திக்கொள்ள முயன்றுவரும் வேளையில் சீனா இந்தியாவுடன் நெருங்கி வருவதானது ஜப்பானுக்கு சற்று சங்கடமாகவே இருக்கும்.

சீனா ஐ.நா.வின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடு. முன்னர் சீனாவுக்கு ஐ.நா.வில் உறுப்புரிமை தரப்பட வேண்டும் என பகிரங்கமாக குரல் எழுப்பி வந்த நாடுகளில் இந்தியா முக்கிய இடம் பெற்றிருந்தது.

பலகாலம் சீனாவுக்கு ஐ.நா.வில் இடம் கிடைக்காமலிருக்க ''வீட்டோ'' வைப் பயன்படுத்தி வந்த நாடு அமெரிக்கா. அந்த அமெரிக்காவின் ஆதரவோடு முன்னைய எதிரியான ஜப்பான் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை பெறுவதை சீனா விரும்பாமல் இருக்கலாம். எனவே பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு இடம் கிடைப்பதை சீனா ஆதரிக்கக் கூடும்.

மேலும் ஆஸியான் மகாநாட்டிலும், மெக்ஸிக்கோ வர்த்தக மகா நாட்டிலும் இந்தியா வளரும் நாடுகளின் சார்பில் நல்லபடியாகவே நடந்து கொண்டுள்ளது.

பார்க்கப்போனால் பாதுகாப்புச் சபை நிரந்தர உறுப்புரிமை விடயத்தில் அமெரிக்காவின் ஆதரவிலான ஜப்பானா, இன்னமும் முடிவு செய்யாதிருக்கும் இதர நாடுகளின் ஆதரவைப்பெற்று இந்தியாவா இடம் பெறப்போகிறது என்பது இனிமேல் தான் தெரியவரும்.

## இந்திய வம்சாவளியினரும் இந்திய அமைச்சர் விஜயமும்

இந்திய வம்சாவளி மக்கள் 3 லட்சம் பேருக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான தீர்மானம் இலங்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இந்திய வெளிநாட்டமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்திருக்கிறார்.

இந்தத் தீர்மானத்தைப் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. உட்பட சகல கட்சிகளும் ஆதரித்து வாக்களித்திருப்பது இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்கவிற்கு மகிழ்ச்சியளித்திருக்கும் என்பதுடன் இந்த விடயமாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இருந்து வந்த முறுகல் நிலை வெகுவாகக் குறைந்திருக்கும் என்றும் கொள்ளமுடியும். இதை ஓரளவிற்கு வெளிப்படுத்தும் வகையில் திருகோணமலையில் உள்ள இந்திய எண்ணெய்க் குதங்களுக்கு விடுதலைப்புலிகளால் எதுவித ஆபத்தும் இல்லை என்று சிங்கா கூறியிருப்பது அமைந்துள்ளது.

திருமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களுக்கு புலிகளால் பெரும் ஆபத்தான நிலை இருப்பதாக ஒருதடவை அனுரா தலைமையில் சென்ற குழுவும் பின்னர் முன்னாள் வெளியுறவு அமைச்சரும் இந்தியத் தலைவர்களுக்கு எடுத்து விளக்கியிருந்தார்கள். முன்னாள் அமைச்சர் வரைபடங்கள் சகிதம் சென்று இந்தியத் தலைவர்களுக்கு புலிகளால் ஏற்படக்கூடிய ஆபத்து பற்றி எடுத்து விளக்கிவிட்டு வந்திருந்தார். அதுபோக நாள் தவறாமல புலிகளினால் ஏற்படக்கூடிய ஆபத்து பற்றி ஜனாதிபதி குமாரதுங்க அறிக்கைகள், உரைகள் என்று விளாசித் தள்ளிக்கொண்டிருக்கிறார். இந்த நிலைமையில், இலங்கைக்கு வந்த கையோடு புலிகளால் தமது எண்ணெய்க் குதங்களுக்கு ஆபத்தில்லையென்று இந்திய அமைச்சர் கூறியிருப்பது எதிர்க்கட்சியினருக்கு முகத்தில் அடித்த மாதிரி இருக்கக் கூடும். அரசு சார்பானவர்களுக்கு மகிழ்ச்சியளித்திருக்கவும் முடியும்.

இந்திய வம்சாவளியினரால் அன்றைய யு.என்.பி.அரசுக்கு ஆபத்து இருப்பதாகக் கருதியே அந்த மக்களின் பிரஜாவுரிமையையும், வாக்குரிமையையும் யு.என்.பி. அரசு பறித்துக்கொண்டு அவர்களைப் பரிதாப நிலைக்குள் தள்ளிவிட்டது அன்று.

இன்றைய பிரதமரின் முனனைய தலைமுறையினர் செய்துவிட்ட அந்த வரலாற்றுத் தவறொன்றை இவர்கள் திருத்தியிருக்கிறார்கள்.

இதுவரை காலமும் அந்நியர்கள் போலவும் அடிமைகள் போலவும் நடத்தப்பட்டு வந்துள்ள இந்திய வம்சாவளியினருக்கு இனிமேலாகுதல் அந்த நிலையிலிருந்து விமோசனம் கிடைக்க வேண்டும்.

முதன் முதல் பிரஜாவுரிமைச் சட்டம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட சமயத்தில் அந்த மக்களின் பிரதிநிதித்துவக் கட்சிகளும் இடதுசாரிக் கட்சிகளும் மட்டுமே அதனை மூர்க்கமாக எதிர்த்தன. ஐ.தே.கட்சியினால் தூண்டி விடப்பட்ட இந்திய விரோத கோட்பாடு அன்று மலையகமெங்கும் பரவி இனத்துவேஷத்தையும் விளைவித்தது. அந்த வகையில் தமிழர் பிரச்சினைகள் தலைதூக்கிய சமயங்களில் இந்த மக்களே சிங்கள இன விரோதிகளின் குறியாகவும் அமைந்தனர்.

# ஜப்பானுக்கு சங்கடம்?

1981ஆம் ஆண்டு அளவில் தமிழ் மக்கள் திட்டமிட்ட தாக்குதல்களுக்குள்ளாக்கப்பட்ட சமயம் மலையகத்தில் மூலை முடக்குகளில் வாழ்ந்த தமிழர்களும் கூட குண்டர்களால் தாக்கப்பட்டார்கள். இவ்வாறு தமிழர்கள் தேடித் தேடி தாக்கப்பட்டமைக்கு அவர்களை முழுமையாகவே மலையகப் பகுதிகளில் இருந்து துரத்தி விடலாம் என்று அவர்கள் கருதியிருந்தனர். ஆனால் எந்தவித இன்னலையும் தாங்கிப் பழகிப்போன அவர்கள் காடுகளிலும் மலைச் சரிவுகளிலும் பதுங்கியிருந்துவிட்டு தங்கள் இடங்களுக்குத் திரும்பி வந்தனர்.

இன்று அம் மக்கள் அனைவருக்கும் பிரஜாவுரிமை வழங்க சகல தரப்பினரும் ஒன்றாக ஆதரவளித்திருப்பது பெரிய ஆறுதல் என்றாலும் இனக் கலவரங்கள் போன்ற சம்பவங்களின் போதும் இம் மாதிரியான ஒற்றுமையுடன் இந்தக் கட்சிகள் அம் மக்களை ஆதரித்துப் பாதுகாக்க வேண்டுமே!

ஆனால் சிஹல உறுமய போன்ற அமைப்புகள் இவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதை விரும்பவில்லை. மலையகத்தையும் வடக்கு-கிழக்கோடு இணைபபதற்கு இந்த மக்கள் ஆதரவளிப்பார்கள் என்று சிஹல உறுமயத் தலைவர்கள் விசனப்படுவதாகத் தெரிகின்றது.

## பிரார்த்தனையால் பிரயோசனமில்லையா?

நோயால் வாடும் ஒருவருக்காக இன்னொருவர் பிரார்த்தனை செய்வதனால் பயன் ஏற்படுமா?

ஏற்படும் என்பதே பெரும்பாலான சமயவாதிகளின் விடை.

நோயகளை பிரார்த்தனை மூலம் குணமாக்குவதாகக் கூறியே சில சமயப் பிரிவினர் பிற மதத்தவர்களை சமய மாற்றம் செய்து வருகிறார்கள்.

ஆனால் விஞ்ஞானிகள் இதற்கு என்ன கூறுகிறார்கள் என்பதை அறியும்போது சுவாரஸ்யமாக இருக்கிறது.

ஒரு மனிதனுக்காக வேறு மனிதர்கள் தனியாகவோ, குழுவாகவோ பிரார்த்தனை செய்வதனால் எதுவிதப் பயனும் ஏற்படுவதில்லை என்று தற்பொழுது விஞ்ஞானிகள் கூறத் தொடங்கியிருக்கிறார்கள்.

விஞ்ஞானிகள் எதையும் எழுந்தமானமாக சொல்வதில்லை. விஞ்ஞான பூர்வமாக ஆராய்ச்சிகள் செய்த பின்பே இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

வட கரோலினாவிலுள்ள டியூக் பல்கலைக்கழக மருத்துவ நிலையம், 9 ஆஸ்பத்திரிகளைச் சேர்ந்த 750 நோயாளிகள் மீது இந்தப் பரிசோதனையை 3 ஆண்டுகளாக நடத்தியுள்ளது. உலகின் பல இடங்களிலும் 12 பிரார்த்தனைக் குழுக்கள் இதில் சம்பந்தப்பட்டிருந்தன. இவர்களில் மாஞ்செஸ்டரைச் சேர்ந்த கிறிஸ்தவர்களிலிருந்து நேபாளத்திலுள்ள பௌத்தர்கள் வரை அடங்கியிருந்தனர். முன்னர் குறுகிய அளவில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வின் மூலம் பிரார்த்தனையினால் ஓரளவில் நன்மையான பயனிருப்பதாகக் கூறப்பட்டது. ஆனால் இம்முறை விரிவாக நடத்தப்பட்டுள்ள ஆய்வுகளில் எதிர்மறையான முடிவுகளை விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

இந்த ஆய்வுபற்றி டர்ஹான் பிஷப் அதிவந் ரொம்றைட் கருத்து வெளியிடுகையில் ''இது ஒழுங்கற்ற ஆய்வு'' என்று குறை கூறினார். ''யந்திரத்தில் காசைப் போட்டுவிட்டு ரிக்கற்றை எடுப்பது போன்றதல்ல, பிரார்த்தனை என்பது இது கடவுளுக்கே சோதனை வைப்பதைப் போன்றது. சோதனையில் அவர் சித்தியடைகிறாரா என்று பார்க்க முயல்வதாகும் என்று அவர் மேலும குறிப்பிட்டுள்ளார். பைபிளின் புதிய பழைய ஏற்பாடுகள் இரண்டிலுமே கடவுளை எவரும் சோதனைக்குட்படுத்தக் கூடாது என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

''மந்த்ரா திட்டம்'' (**Mantra Project**) என பெயர் சூட்டப் பட்டிருந்த ஆய்வு டாக்டர் மிச்கிருகொப் என்பவரின் தலைமையில் நடத்தப்பட்டது. இரத்தக் குழாய்களில் ஏற்பட்ட அடைப்புக்களை அகற்றுவதற்கான சிகிச்சையை எதிர்நோக்கியிருந்த 750 நோயாளிகள் இந்த ஆய்வில் சேர்க்கப்பட்டிருந்தனர். கணனியால் அங்குமிங்குமாகத் தெரிவுசெய்யப்பட்ட நோயாளிகளின் பெயர்கள் 12 பிரர்த்தனைக குழுக்களுக்கும் அனுப்பப்பட்டன. பெயா கிடைக்கப்பெற்றவுடனேயே அவர்களுக்காக பிரார்த்தனைகள் ஆரம்பிக்கப்பட்டன. யாருக்காக பிரார்த்தனை நடைபெறுகிறது என்பது ஆஸபத்திரிக்கோ, நோயாளிகளுக்கோ, அவர்களின் உறவினர்களுக்கோ அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. அமெரிக்க கிறிஸ்தவத் தாய்மார்கள், பால்டிமோரிலுள்ள ஒரு மடத்தைச் சேர்ந்த கன்னியாஸ்திரிகள், சுபி முஸ்லிம்கள், நேபாளத்திலுள்ள புத்த சமயக் குருமார்கள், ஆங்கில டாக்டர்கள், மான்செஸ்டரிலுள்ள மருத்துவ மாணவர்கள் போன்றோர் இந்தப் பிரார்த்தனையில் சம்பந்தப்பட்டிருந்தனர். பிரார்த்தனைகள் ஈ-மெயில் செய்யப்பட்டு ஜெருசலேமில் அழுகைச் சுவரிலும் வைக்கப் பட்டது.

ஆய்வின் முடிவில் நோயாளிகளிடம் குறிப்பிடக்கூடிய முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை. பிரார்த்தனைக்குட்பட்ட அல்லது பிரார்த்தனைக்குட்படாத நோயாளிகள் இருதரப்பிற்கிடையிலும் உடல் நிலையில் எதுவித வித்தியாசமும் காணப்படவில்லை.

## தனி மனிதனின் சொந்தப் பிரார்த்தனை

ஒரு மனிதன் தனக்கு ஏற்பட்டுள்ள நோயை அல்லது துன்பத்தைத் தானே உணர்ந்து இறைவனிடம் மன்றாடிப் பிரார்த்தனை செய்வதன் மூலம் பலன் கிடைக்குமா என்பதைப்பற்றி இந்த விஞ்ஞானிகள் ஆராய்ந்திருப்பதாகத் தெரியவில்லை.

ஒருவர் தன் துன்பத்தை அல்லது தனக்கு ஏற்பட்டுள்ள நோயைப் பற்றி இன்னொருவருக்கு சொல்வதன் மூலம் மன அமைதி பெறுகிறார் என்பது சாதாரணமாக எவருக்கும் தெரிந்த விடயம். அதையே இறைவனிடம் இறைஞ்சிக் கூறி மன்றாடும் போது இன்னும் அதிகமான மன அமைதி ஏற்பட முடியும். இது உளவியல் சார்ந்த விடயமானாலும் இறைவனில் அதீத நம்பிக்கை வைத்து பிரார்த்திப்பதன் மூலம் தனி மனிதன் நிம்மதி பெற முடியும் என்பதை தனிப்பட்ட பலரது வாழ்க்கை அனுபவங்களிலிருந்து அறிகிறோம்.

அவ்வாறு பிரார்த்தனையில் ஈடுபடுபவர் தனது கடந்தகால தவறான செயற்பாடுகளுககாக வருந்துபவராகவும் எதிர்காலத்தில் அவைகளை மீளவும் செயவதில்லை என்று உறுதி கொள்பவராகவும் இருப்பது அவசியம். இல்லாதவிடத்து இறைவனின் கருணையை எங்ஙனம் பெறமுடியும்? தன்னை ஒரு வரைமுறையான ஒழுக்கத்துக்குள் கட்டுப்படுத்திக் கொள்ளும் மனிதனே இறைவனை நெஞ்சார நெருங்க முடியும். ஒழுக்கத்தைக் கைக்கொளளாமல் வெறும் சம்பிரதாயங்களைக் கைக்கொள்வதென்பது வெளிப்பகட்டே. இப்படியானவர்கள் தம்மையும் ஏமாற்றி இறைவனையும் ஏமாற்றப் பார்ப்பவர்கள்.

* * *

## விசித்திர மிருகம்

அவுஸ்திரேலியா விசித்திர மிருகங்களுக்குப் பேர்போன நாடு அல்லவா? கங்காரு இந்த வகையில் ஒன்று. கோ-ஆ-லா (**Koala**) என்றொரு கரடி இனம் அங்கு இருக்கின்றது. இந்த மிருகம் தண்ணீரே குடிப்பதில்லையாம். இக்லிப்ரஸ் (ஊசிமரம்) என்ற மரத்தை மட்டுமே சார்ந்து வாழ்கின்ற இம் மிருகம் அம்மரத்தின் இலைகளிலுள்ள ஈரத்தன்மையுடன் தண்ணீர்த் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளுமாம்.

**அன்பன்**

# அன்றும் இன்றும்

---

# அரச எதிர்ப்பு ஊர்வலத்தை தடுத்து நிறுத்த வேண்டுகோள்

(கொழும்பு)

இந்துக்களின் புனித தினமான தீபாவளி தினத்தன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கொழும்பில் அரச எதிர்ப்பு ஊர்வலம் நடத்துவதை இடைநிறுத்த வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் அவசர வேண்டுகோளொன்றை விடுத்துள்ளது.

இது தொடர்பாக கடிதமொன்றையும் மன்றம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது,

இந்துக்களினால் புனித தினமாக கொண்டாடப்பட்டு வரும் தீபாவளி தினத்தன்று இத்தகைய ஊர்வலங்களை நடத்துவது இந்துக்களின் உணர்வுகளை கடுமையாகப் பாதிக்கும் செயலாகும்.

இரு தசாப்த காலமாக பல்வேறு துன்பங்களை அனுபவித்து வரும் இந்துக்கள் நிரந்தர சமாதானம் வேண்டி தீபாவளித் தினத்தன்று பிரார்த்தனையில் ஈடுபடவுள்ளனர்.

இந்நிலையில், இத்தகைய அரச எதிர்ப்புப் பேரணிகளை நடத்துவதை ஜனாதிபதி தடுத்து நிறுத்த வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-61,10)

# வடக்கு-கிழக்கு காணி அதிகாரங்களை புலிகளிடமே வழங்க வேண்டும்

## காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவிப்பு



(கொழும்பு)

**சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமது மண் பறிபோவதாக அஞ்சுவதாலேயே தமிழ் மக்கள் காணி உரிமை மற்றும் பாதுகாப்பு உத்தரவாதங்கள் பற்றி பேசுகின்றார்கள். இதனால் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் மூலமாக இவர்களின் இந்த அச்சநிலையைப் போக்க வேண்டிய கடப்பாடு சிங்கள மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.**

**இவ்வாறு தெரிவித்துள்ளார் காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண,கடந்த வியாழக்கிழமை கொழுமபு இலங்கை மன்றக்கல்லூரியில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் மாற்றுக் கொள்கை மையத்தின் பணிப்பாளர் பாக்கிய ஜோதி சரவணமுத்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச்சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே மற்றும் பல அரசியல் ஆய்வாளர்கள், விமர்சகர்கள் எனப் பலர் கலந்து கொண்ட இக் கருத்தரங்கில் அமைச்சர் ராஜித சேனாரட்ண தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஒன்றுபட்ட ஐக்கிய இலங்கைக்குள் வாழ்வதா? அல்லது தமிழீழம் உருவாகுவதற்கு இடம் கொடுப்பதா? என்பதை சிங்கள மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

இலங்கை சுதந்திரமடைந்தபின் முதலாவது பிரதமரான டி.எஸ்.சேனநாயக்கா,வடக்கு-கிழக்குப் பகுதிகளில் குடியேற்றங்களை ஆரம்பித்து சிங்களவர்களைக் குடியேற்றினார்.

இதுபோல இன்னொரு தடவை இன்னொரு பிரதமர் வந்து சிங்கள மக்களை வடக்கு-கிழக்கில் குடியேற்ற மாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம் எனத்தமிழ் மக்கள் தற்போது கேட்கின்றார்கள்.

எனவே, தான அவர்கள் இடைக்கால நிர்வாக அமைப்பைக் கோருகின்றார்கள்.

இதேசமயம், சமஷ்டி அரசியல் அமைப்பு முறையும் இலங்கைக்கு மிகப் பொருத்தமானதாக இருப்பதுடன் இதுவும் தமிழர்களின் பிரச்சினையை தீர்க்கும் வழிமுறையில் ஒன்றாக இருக்கின்றது.

இத்தகைய ஏதாவதொரு வழி மூலம் இனப்பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையுடன் அரசு செயற்பட்டுவரும் அதேவேளை, எதிர்க்கட்சியினர் நாட்டின் தேசிய நலனுக்கு கேடு விளைவிக்கும் வகையில் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான முரண்பாடான சிந்தனைகளில் இருந்து விடுபட்டு வேற்றுமையிலும் ஒற்றுமையாக வாழும் யதார்த்த விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

இதேசமயம், காணி அதிகாரங்களை விடுதலைப் புலிகளுக்கு விட்டுக் கொடுக்கப் போகிறீர்களா? என சில பத்திரிகையாளர்கள் என்னிடம் கேட்கின்றார்கள்.

என்னைப் பொறுத்த வரையில் வடக்கு- கிழக்கு மாகாணத்திற்குரிய காணி அதிகாரங்கள அவர்களுக்கு உரியதாக வழங்கப்படவேண்டும்.

தென்பகுதிக் காணிகளுக்குரிய அதிகாரங்களை விடுதலைப்புலிகள் கோரவில்லை. மாறாக தமது பகுதியில் காணி அதிகாரம் உள்ளிட்ட தம்மைத் தாமே நிர்வகிக்கக் கூடிய உள்ளக சுயநிர்ணய உரிமையைத் தான் கேட்கின்றார்கள்.


இலங்கை 12 நூற்றாண்டுகளாக தனித்தனியான அதிகாரங்களைக் கொண்ட 3 இராஜ்ஜியங்களாகவே பிரிக்கப்பட்டிருந்தது. ராஜரட்ட, ருகுணுரட்ட, மாயரட்ட எனப்பிரிந்திருந்தன. பின்னர், பிரித்தானியரின் ஆட்சியின் போது அதாவது 1815 ஆம் ஆண்டு ஒற்றை ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது.

அதன் பின்னர், 1948 ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலப்பகுதியில் டட்லிசேனநாயக்கா, ஜே.ஆர்.ஜயவர்த்தன ஆகியோர் ஆதிகாரப் பரவலுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள முயற்சித்தனர். ஆயினும், அதற்கு தமிழ்மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அத்துடன், அரைகுறையாக அன்று ஏற்பாடு செய்யப்பட்ட அதிகாரப் பகிர்வு முறைகளைக் கூட தென்பகுதியில் உள்ள அரசியல் தலைமைகள் எதிர்த்தன. இதனால் இவர்களின் இந்த முயற்சி தேல்வியடைந்தது. டட்லி- செல்வா ஒப்பந்தத்தை அன்று சிறிமாவோ பண்டாரநாயக்க கடுமையாக எதிர்த்தார்.

இன்றும் இவ் ஒப்பந்தம் பற்றி எதுவும் தெரியாது என்பதால் பலர் இவ் ஒப்பந்தத்தை எதிர்க்கின்றார்கள். சிங்கள மக்களைத் தவறான பாதைகக் கொண்டு செல்கின்றார்கள்.

எனவே, பூரணத்துவமான சமஷ்டி அரசியல் அமைப்பு முறை இந் நாட்டிற்கு பொருத்தமானதாக இருப்பதால், இது குறித்த விழிப்புணர்வுகளை மக்களுக்கு ஏற்படுத்த வேணடும்.

இதேசமயம் இனவுறவின் புரிந்துணர்விற்கான இறுதிக்கால கட்டம் இது என்பதையும் மக்கள் உணரத் தவறிவிடக் கூடாது எனக்குறிப்பிட்டார். (உ-10)



யாழ். ஆனைப்பந்தி மெ.மிஷன் வித்தியாலயத்தில் நடைபெற்ற சிறுவர்நாடக அரங்கில் ஓர் காட்சியை படத்தில் காண்கிறீர்கள்.

## தென்பகுதி வியாபாரிகளால் உள்ளூர் உற்பத்தி பாதிப்பு

(தொல்புரம்)

ஏ-9 பாதை திறக்கப்பட்டதன் பின்னர், தென்பகுதியிலிருந்து பெருமளவு கைத்தறித் துணிவகைகள் யாழ்.குடாநாட்டுக்குக் கொண்டு வரப்படுவதால் உளளூரில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி துணி வகைகள் விலையிலும் கேள்வியலும் வீழ்ச்சியடைந்துள்ளதாக வலி-மேற்கு பிரதேச செயலகத்தின் சிரேஷ்ட மேற்பார்வையாளர் க.சிவசுபபிரமணியம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போதைய சமாதானச் சூழ்நிலையை அடுத்து, தென்பகுதி வியாபாரிகள் தமது துணிவகைகளை விற்பனை செய்வதற்காக யாழ்.குடாநாட்டிற்குப் படையெடுத்துள்ளனர்.

இந்நிலையை அடுத்து, உள்ளூர் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி உளளூரிலேயே தயாரிக்கப்படும் கைத்தறித் துணி வகைகளின் விற்பனையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதுடன் அவற்றின் கேள்வியும் குறைவடைந்துள்ளது.

அத்துடன், உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தியே உற்பத்தி செய்யப்படும் துணிவகைகளின் விலையும் உள்ளூர் மூலப பொருட்களின் விலையேற்றத்தினால் அதிகரித்துள்ளது.

மேற்படிக் காரணங்களால், இங்குள்ள உளளூர் உற்பத்தி துணிவகைகளை விற்பனை செய்ய முடியாது, அவை தேக்க நிலையில் இருப்பதாக அவர் கவலை தெரிவித்துள்ளார்.

(தி-70)

## கடலாமை கொண்டு சென்றவர்கள் பிடிபட்டனர்

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடலில் மீன் வலையில அகப்பட்டகடல் ஆமையைப்பிடித்துச சென்ற குற்றச்சாட்டின் பேரில் இளைஞர்கள் இருவர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருநகரைச்சேர்ந்த எஸ். வினிகாந்,அன்ரனி நிக்ஷன் ஆகிய இருவருமே வனவள பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களாவர்.

பிடிக்கப்பட்ட ஆமை யாழ். பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. (த-7)

## வாய்க்கால் புனரமைப்பு

(நவாலி)

சணடிலிப்பாய்ப் பகுதியில் இருந்து கட்டுடை வயல்களுக்கு மழை நீர் செல்லும் வாய்க்கால்கலைப் புனரமைக்கும் பணியில் சண்டிலிப்பாய் பிரதேச சபை ஈடுபட்டுவருகின்றது. (தி-102)

## இராணுவ சிப்பாய் வீட்டில் பெருந்தொகை ஆயுதம்

(அனுராதபுரம்)

பெருந்தொகையான ஆயுதங்களைத் தனது வீட்டில் மறைத்து வைத்திருந்த இராணுவச்சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரது வீட்டிலிருந்த ஆயுதங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.


இச்சம்பவம் அனுராதபுரத்தில் இடம்பெற்றுள்ளது. அண்மையில இரவு பிரஸ்தாபச் சிப்பாயின் வீட்டைச் சுற்றிவளைத்த பொலிஸார் அவரைக் கைது செய்ததுடன் ஆயுதங்களையும் மீட்டுள்ளனர்.

(த)

## கடனடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரம்

(பொன்னாலை)

சீடாத்திட்டத்தின் கீழ் தொல்புரம் கமநல சேவைகள் நிலையத்தின் வலிமேற்கு பகுதிக்குட்பட்ட விவசாய சம்மேளனங்களின் ஊடாக அவ்வப்பகுதி விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் கடனடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன. (தி-49)



யாழ். ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலய இந்து மாமன்றம் நடாத்திய சமய அறிவுப் பரீட்சையில் முதலிடம் பெற்ற மாணவிக்கு பாடசாலை அதிபர் எஸ். சோமேஸ்வரபிள்ளை பரிசு வழங்குகின்றார். (படங்கள்: தாவடி நிருபர்)

## பாட நூல்கள் அச்சிடும் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

65 கோடி 60இலட்சம ரூபா செலவில் ஒரு கோடி73 இலட்சம் பாட நூல்கள் அச்சிடப்பட்டு வருவதாக கல்வி வெளியீட்டுப்பணியகம் அறிவித்துள்ளது.

இப்பாட நூல்கள் அனைத்தும் டிசம்பர் விடுமுறைக்கு முன்னதாக பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என பாடநூல்கள் வெளியிட்டு ஆணையாளர் எஸ்.எல் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டுகளில் பாடப் புத்தக விநியோகத்தில் ஏற்பட்ட கால தாமதத்தைப்போக்கும் நோக்குடன், அடுத்த ஆண்டுக்கான புத்தங்கள் அச்சடிக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (தி-60)

## பயிற்சிப்பட்டறை

(தொல்புரம்)

வலி.மேற்கு பிரதேச செயலகத்தினால் கிராம மட்ட அமைப்புக்களின் தலைவர்களுக்கான ஆற்றல் மேம்பாட்டு பயிற்சிப்பட்டறை ஒன்று நடாத்தப்படவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 31ஆம்திகதி முதல் அடுத்த மாதம் 2ஆம்திகதிவரை தொடர்ந்து 3 தினங்கள் வலிமேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9.00 முதல் பி.ப. 4.30 மணி வரை நடைபெறும் என வலிமேற்கு உதவிப்பிரதேச செயலர் மு.சிவராசா அறிவித்துள்ளார். (தி-70)

## இன்று ஒரு தகவல்

# அதிர்ஷ்டம்

வாய்ப்புகள் தாமகாவே எம்மைத் தேடிவரும் என்று நினைக்கக்கூடாது. வாய்ப்புகளை தாம் தான் தேடிச் செல்ல வேண்டும். இல்லாவிட்டால் நாமாகவே உருவாக்க வேண்டும். இதற்கு ஒரு உண்மையான நிகழ்ச்சி கூறப்படுகின்றது.

அமெரிக்காவின் முக்கிய நகரம் நியூயோர்க். அங்கு ஒரு பெரிய வங்கி உண்டு. அந்த வங்கியில் வேலைக்குச் சேர வேண்டும் என்று ஒரு இளைஞனுக்கு நீண்டநாளாக விருப்பம் இருந்தது. ஆயினும் அந்த இளைஞன் வறுமையால் ஒன்றும் கஷ்டப்படவில்லை. வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர் தான். இருந்தாலும் வேலை செய்யாமல் இருக்க முடியுமா? எனவே அவர் இது போன்றதோர் பெரிய வங்கியில் கடமை புரிய வேண்டுமென பெரிய இலட்சியத்தையே உருவாக்கிக் கொண்டார்.

அதனால் அந்த வங்கியின் தலைவரைப்பார்ப்பதற்கு ஒரு நாள் சென்றார். வங்கித் தலைவரின் செயலாளரைச் சந்தித்தார். தலைவரைப்பார்ப்பதற்கு வாய்ப்பளிக்கும் படி கூறினார். செயலாளரோ இவரை ஏளனமாகப் பார்த்தார். ''அதெல்லாம் முடியாது வங்கித்தலைவர் இப்போது நியூயோர்க்கில் இருந்து வாஷிங்டன் செல்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருகின்றார். ரயில் புறப்படுவதற்கு இன்னும் ஒரு மணித்தியாலம் தான் உள்ளது. அதனால் இப்போது அவரைச் சநதிக்க வாய்பில்லை'' என்று கூறி விரட்டி விட்டார் செயலாளர்.

அவர் கூறியது போலவே இந்தத்தலைவர் நியூயோர்கில் இருந்து வாஷிங்டன் புறப்படுவதற்கு ரயில் நிலையம் சென்று ரயிலிலும் ஏறிவிட்டார். திடீரென்று பார்த்தால் அவர் அமர்ந்திருக்கும் அந்த முதல் வகுப்புப் பெட்டியில் இவருக்கு முன்னால் ஒரு இளைஞன் அமர்ந்திருந்தான். என்னவென்று கேட்டார் இவர். ''இல்லை ஐயா! உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும் வாய்ப்புத் தருகின்றீர்களா?'' என்றார். அவர் கூறினார் ''என்னைப்பார்ப்பதற்கு நீங்கள் அலுவலகத்திற்கு அல்லவா வந்திருக்கவேண்டும்? இங்கு வந்தால் என்ன அர்த்தம்?'' இளைஞர் சொன்னார் ''நான் அலுவலகத்திற்குத் தான் வருவதற்கு முயற்சி செய்தேன். ஆனால் நீங்கள் மிகவும் பிஸியாக இருந்ததாகக் கேள்விப்பட்டேன். ரயில் பயணம் செய்யப்போவதாகவும் கேள்விப்பட்டேன். அதனால் இப்போது உங்களைச் சந்திக்க முடிவெடுத்தேன்'' என்றார். ''அபபடியென்றாலும்கூட என்னிடம் முன் அனுமதி பெற்றுத்தானே வரவேண்டும். இப்படித் திடீரென்று சந்தித்தால் எப்படி?'' என்று கேட்டார். அதற்கு அந்த இளைஞன் கூறினார். ''அலுவலகத்தில் நீங்கள் ஆயிரம் வேலைகளில் ஈடுபட்டிருப்பீர்கள். அப்போது உங்களிடம் சிறிது நேரம் கதைப்பது கூட மிகுந்த சிரமமாக இருக்கும். அதனால் முன் அனுமதி பெற்றுத்தான் உங்களை வந்து பார்த்திருக்க வேண்டும். அது தான் முறையும் கூட. ஆனால் இப்போது நீங்கள் ரயிலில் பயணம் செய்து கொண்டிருக்கின்றீர்கள். நான் வரும்போது ஒரு பத்திரிகையைப் படித்துக் கொண் டிருக்கின்றீர்கள். பத்திரிகை படித்து முடித்த பின்பு நீங்கள் ஓய்வாகத்தான் இருப்பீர்கள். அந்த நேரத்தில் எனக்காக ஒரு இரண்டு நிமிடமாவது ஒதுக்கிக்கொடுக்கலாமே. இப்போது வேறு எந்த அலுவலுமே உங்களுக்கு இல்லையே'' என்று கேட்டிருக்கின்றார். உடனே அந்த வங்கித் தலைவருக்கு இவரைப்பற்றிய ஒரு நல்ல எண்ணம் வருகின்றது. இவர் புதுமையான ஒரு முறையில் சிந்திக்கின்றாரே என்று யோசித்தார்.

சரி. நீங்கள் கூறவந்த விடயத்தைக் கூறுங்கள் என்று கேடடார். இளைஞன் கூறினார் ''நான் உங்கள் வங்கியில் வேலைக்குச் சேரவேண்டும். நான் வறுமையினால் வேலைக்கு வரவில்லை. ஒரு பெரிய வங்கியில் உங்களைப் போல் ஒரு திறமையான தலைவரின் கீழ் வேலை செய்ய வேண்டும். பேரும் புகழும் வாங்க வேண்டும் என்று எனக்கு ஆசை. அதனால் தான் நான் வேலை கேட்டு வந்தேன்'' என்றார்.

வங்கித் தலைவருக்கு ஒரு புறம் கோபம். இருந்தாலும் சும்மா இருக்கும் நேரத்தை இப்படி பயன்படுத்தலாமே என்று அந்த இளைஞனிடம் சில கேள்விகளைக்கேட்க ஆரம்பித்தார். இளைஞன் மிகவும் வேகமாக நல்ல பதில்களைக் கூற ஆரம்பித்தவுடன் இவரது மனதுக்குள் அவரைப்பற்றி ஒரு நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டு விட்டது. அதைவிட முக்கியமாக கருதியது என்னவென்றால் இந்த மாதிரி நேரத்தில் கூட ஒரு வாய்பை ஏற்படுத்திக்கொண்டு வேலை வாங்க முடியும் என்கின்ற விடா முயற்சி தன்னம்பிக்கை கொண்ட இளைஞர்கள் தான் தேவை என்று முடிவு செய்து அந்த இளைஞருக்கு வேலை கொடுத்தாராம். அந்த இளைஞன் யார் தெரியுமா? அவர் தான் அமெரிக்க ஜனாதிபதி கென்னடி!

மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்குச் செல்லும் ரயிலில் ஒரு பெரியவர் அமர்ந்திருந்தார். பக்கத்தில் அவரது பெரியதோர் பை ஒன்றை வைத்தார். ஒரு இளைஞன் வந்தான் பையை எடுங்கள் நான் அமரவேண்டும் என்றான் இவரிடம். இவரோ முடியாது எனது நண்பர் ஒருவர் வரப்போகின்றார். அவருக்குத்தான் நான் இடம் பிடித்து வைத்துள்ளேன் என்றார். ''அவர் வந்தவுடன் நான் எழுந்துகொள்கின்றேன்'' என்று கூறிவிட்டு பையையும் எடுத்து விட்டு அந்த இடத்தில் அமர்ந்துகொண்டான். ரயில் நகர ஆரம்பித்து விட்டது. நண்பனைக்காணவில்லை. ''எங்கே நண்பர்?'' என்றான் இளைஞன். நண்பர் வரமாட்டார் போல் இருக்கின்றது என்றார் முதியவர். அவர் வராத போது இந்தப் பை மாத்திரம் எதற்கு இதை வெளியே எறியுங்கள் என்று கூறி அதனை உடனே எறிந்தும் விட்டானாம். முதியவருக்கு எப்படி இருந்திருக்கும்?

இளசை எஸ்.சுந்தரம்

# முஸ்லிம்கள் உரிமையைப் பெற ஆயுதம் ஏந்தும் தேவை இல்லை!

## வன்னி எம்.பி. ரிசாத் பதியுதீன் தெரிவிப்பு

(புத்தளம்)

வடக்கு-கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களின் அபிலாசைகளுக்காக ஆயுதம ஏந்த வேணடியஅவசியம் இல்லை. தற்போது இருக்கும் அரசியல் தளத்தைக்கொண்டு பேச்சுவார்த்தைகள் மூலம் முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மீள் குடியமர்வுச் செயலணித் தலைவருமான ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

புத்தளம் இஸ்லாமிய கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலவச சட்ட உதவிகள் மன்றத்தின் கருத்தரங்கில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சியை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரிக்கின்றது.

சமாதானப் பேச்சுக்கள் மூலம் வடபகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

# சர்வதேச நியமங்களுக்கு அமைவாகவே புலிகளின் இடைக்காலத் திட்டம் இருக்கும்

## மட்டு- அம்பாறை சிறப்புத் தளபதி கருத்து

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளினால் தயாரிக்கப்பட்டுள்ள இடைக்காலத் திட்டவரைபு யோசனைகள் சர்வதேச நியமங்களின் பிரகாரம் சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழீழவிடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு கரடியனாறு தேனகம் விடுதியில் இடம்பெற்ற தமது அமைப்பில் இணைந்த சிறுவர்களை அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

சர்வதேச பிரமாணங்களுக்கு அமைவாக இடைக்காலத் திட்டவரைபு தயாரிக்கப்படுவதனாலேயே திட்டவரைபு அரசிடம் கையளிப்பதில் தாமதம் ஏற்பட்டுவருகிறது. மேற்படி திட்டவரைபு தலைவர் பிரபாகரனின் பரிசீலனையின் பின்னரே அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

நாம் கையளிக்கவுள்ள இடைக்காலத் திட்ட வரைபை ஸ்ரீலங்கா அரசாங்கம் நிராகரித்தால் சர்வதேச சமூகத்திற்கு உரிய காரணத்தைச் சொல்லியே ஆகவேண்டும்.

இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைபை ஏற்றுக்கொள்ளாது சமாதான முயற்சியை அரசாங்கம் குழப்பியடிக்குமானால் அதனை ஐ.நா.சபையின் கவனத்திற்கு கொண்டுவருவோம் என்றும் அவர் கூறினார். (த)

## இராசி பலன்

**20. 10. 2003**

**(ஐப்பசி 3, திங்கள்)**

**தசமி - பி.இ. 2.34 வரை**

**ஆயிலியம் - மு.இ. 9.26 வரை**

**இராகுகாலம் - 7.32 - 9.02**

**சுபநேரம் - 12.02 - 1.32**

**மேடம்**

உடல் நலக்குறைவு,மனக்கிலேசம், மதாசுகம், காரிய தாமதம்.

**இடபம்**

பிரயாண நன்மை, குடும்ப மகிழ்ச்சி, நல்ல முயற்சி, எடுத்த காரியம் கைகூடும்.

**மிதுனம்**

முயற்சி தாமதம், சிந்தனை மிகுதி, நண்பர் விவாதம், கௌரவக்குறைவு.

**கடகம்**

தேக நலன், செய்தொழில் நன்மை, காரிய சித்தி, கலந்துரையாடல்.

**சிங்கம்**

சயனசுகக்குறைவு, சத்துருஜெயம், எடுத்தகாரியம் தாமதம், பணவிரயம்.

**கன்னி**

புதிய விடயம், நல்ல காரியம், உறவினர் சந்திப்பு, போசன நன்மை.

**துலாம்**

நல்ல செய்தி, நிலை மாற்றம், தொழில் நன்மை, இலட்சியம்.

**விருச்சிகம்**

பிறர் உதவி, புதிய திட்டம், பித்த ரோகம், காரிய தாமதம்.

**தனுசு**

அதிசிரத்தைக்குறைவு, மனக்குழப்பம், எதிர்பாராத அச்சம், முயற்சி தாமதம்.

**மகரம்**

அபுர்வ சந்திப்பு, உறவினர் உதவி, காரிய அனுகூலம், செல்வாக்கு.

**கும்பம்**

மனமகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், உற்சாகம், செய்தொழில் முன்னேற்றம்.

**மீனம்**

வியாபார நன்மை, பெரியோர்வேறுப்பு, முயற்சி தாமதம், மனச்சோர்வு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# நாடு பிளவுபடாத வகையில் சமாதானம் முன்னெடுக்கப்படும்

## குருநாகலில் பிரதமர்

(கொழும்பு)

நாடுபிளவு படாதவகையில் சமாதான முயற்சிகளை மேற்கொண்டு நாட்டு மக்களின் மனங்களில் மன நிறைவை ஏற்படுத்துவதே தமது குறிக்கோளாகுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கல்கமுவப் பிரதேசத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த பிரதமர் அங்கு இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் சமாதானத்தை நிலை நாட்டும் பொருட்டு அரசாங்கம் தொடர்ந்தும் தனது கடமைகளைச் செய்யும் நாட்டு மக்கள் சுபீட்சமாக வாழ வேண்டுமாயின் சமாதானம் நிலை நாட்டப்படுவது அவசியம். சமாதானம மலருமாயின் சர்வதேச நாடுகளின் உதவியுடன் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடியதாக இருக்கும் என்றும் பிரதமர் கூறினார். (த)

## மறவன் புலோவில்

# மீளக்குடியமர அனுமதிக்குமாறு சலவைத்தொழிலாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மறவன்புலோவில் குடியிருந்து தற்பொழுது பல்வேறு இடங்களுக்கு இடம்மாறி வாழ்ந்துவரும சலவைத்தொழிலாளர் குடும்பங்களை மீளவும் தமது இடங்களுக்குத் திரும்பி, தமது தொழில்களை ஆரம்பிக்க அனுமதி வழங்கும்படி மறவன்புலோ சலவைத தொழிலாளர் சங்கம் அல்லாரைப் பகுதி இராணுவத் தளபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

மறவன்புலோப் பகுதியில் 25 சலவைத்தொழிலாளர் குடும்பங்கள் வாழ்ந்துவந்ததாகவும் அவர்கள் போர் அனர்த்தங்களால் இடம் பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்ந்து வருவதாகவும் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதிகள் மனித உரிமைகள் ஆணையம், இலங்கைக் கண்காணிப்புக்குழு, பாதுகாப்பு அமைச்சு, இந்து கலாசார அமைச்சர், பலாலி,வரணி, யாழ்ப்பாணம் இராணுவத் தலைமையகங்களுக்கும் இலங்கையில் உள்ள நோர்வே, ஜப்பான், பிரித்தானியா, அமெரிக்கா, கனேடியத் தூதுதரங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (பி)

## கூட்டுறவுப் பணியாளர்களுக்கு

# ஓய்வூதியம் வழங்குவது பற்றி ஆராய்வு

(கொழும்பு)

நாடெங்கிலுமுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது தொடர்பாக ஆலோசனை நடாத்தி வருவதாக தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவர் லயனல் சமரசிங்க தெரிவித்துள்ளாார்.

அண்மையில் மட்டக்களப்பில் இடம்பெற்ற கூட்டுறவு தினவிழாவில் உரையாற்றும் போதே மேற்கண்ட தகவலை அவர் வெளியிட்டுள்ளார்.

இதுவிடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், நாடளாவிய ரீதியில் 331 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வரும் நிலையில் இதுவரையில் 220 சங்கங்கள் மட்டுமே காப்புறுதித் திட்டத்தில் இணைந்துள்ளன. இக் காப்புறுதித் திட்டத்திற்கு 14 கோடி ரூபா தேவைப்படுகிறது.

அத்துடன், கூட்டுறவென்பது தனியே வியாபாரத்தை மாத்திரம் குறிக்கோளாகக் கொள்ளாமல் இன, மத பேதமற்ற சமூகமாகவே செயற்பட்டு வருவதுடன், கூட்டுறவாளர்களின் கல்வி மேம்பாட்டிற்காக மக்கள் வங்கி மூலம் 50 ஆயிரம் ரூபாவை செலவிட்டுள்ளோம். இதன் அடிப்படையில் அவர்களின் மேம் பாட்டிற்காக ஓய்வூதியம் வழங்கும் திட்டம் தொடர்பாகவும் தற்போது ஆராய்ந்து வருவதாகத் தெரிவித் துள்ளார்.

(உ-18)

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். —குறள்

வலம்புரி

## பிரதமரின் பிந்திய ஞானம்

சமாதான முயற்சிகள் குறித்து ஜனாதிபதியுடனும், பொது ஜன ஐக்கிய முன்னணியுடனும் கலந்துரையாடுவதற்குத் தான் தயாராக இருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைக் கடந்த வாரம் சந்தித்த போதே பிரதமர் தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்.

எனினும், பிரதமரின விருப்பத்தை ஜனாதிபதி ஆவலோடு ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. அதேவேளை, பிரதமரின் விருப்பத்தை ஜனாதிபதி உதாசீனம் செய்து விட்டார் என்று குற்றம் சுமத்தவும் முடியாது.

ஏனெனில், சமாதானப் பேச்சுக்களில் ஜனாதிபதி தரப்பிலும் ஒருவர் பங்குபற்றுவதற்கு அனுமதிக்க வேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா பிரதமர் ரணிலிடம் கோரிக்கை விட்டிருந்தார். எனினும் ஜனாதிபதியின் கோரிக்கையை பிரதமர் உதாசீனம் செய்தார். இ்.து பிரதமரின் அரசியல் அனுபவத்தின் பற்றாக் குறையை வெளிப்படுத்தியது.

நாட்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியிடம் சர்வ வல்லமையும் பொதிந்திருக்க, ஜனாதிபதியின் பிரதிநிதி ஒருவர் பங்குபற்றுவதில் எந்தத் தவறும் இருக்க முடியாது. அவ்வாறு ஜனாதிபதியின் பிரதிநிதி ஒருவர் சமாதானப் பேச்சுக்களில பங்குபற்றுவதன் மூலம் தீர்வுத் திட்டத்தை எட்டுவது சுலபமாகக் கூட இருந்திருக்கலாம்.

ஆனால், இதனை உணர்ந்து கொள்ளாத பிரதமர் தன்னிடம் அப்போதிருந்த வரட்டுத் துணிவு காரணமாகவும், அமைச்சர்கள் பீரிஸ், எஸ்.பி. திஸநாயக்க ஆகியோர் ஜனாதிபதி மீது கொண்டிருந்த அதிருப்தி காரணமாகவும் ஜனாதிபதியின் கோரிக்கையை பிரதமர் நிராகரித்தார்.

இலங்கை இன விவகாரத்தைப் பொறுத்தவரை சமாதானப் பேச்சில் வெளிநாடொன்றை அனுசரணையாளராக அழைத்தபெருமை ஜனாதிபதி சந்திரிகாவையே சாரும். அத்துடன் இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை, இங்கு பயங்கரவாதப் பிரச்சினையே உண்டு என ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளர்கள் கூறிவந்த போது,

இல்லை, இலங்கையில் இனப்பிரச்சினையுண்டு, அதனைச் சமாதானப் பேச்சுக்கள் மூலமே தீர்க்க வேண்டுமென கூறிய முதலாவது சிங்களத் தலைவர் ஜனாதிபதி சந்திரிகா என்பதும் மறுக்கப்பட முடியாத உண்மையாகும். இந்நிலையில் அவர் முன்னெடுத்த சமாதான முயற்சிகள், அவரின் உறுதியற்ற தன்மையால் குழம்பியது.

இருந்தும், ஐ.தே.முன்னணி எடுத்துள்ள சமாதான முயற்சி ஜனாதிபதி சந்திரிகா எடுத்த முயற்சியின் தொடர்ச்சி என்பதை பிரதமர் ரணில் மறந்து போனமை துரதிர்ஷ்டமானது.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின் நாட்டின் இரு பிரதான கட்சிகளான பொது ஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசிய முன்னணியும் சேர்ந்தே தீர்வை எட்ட வேண்டும்.

# முஸ்லிம் தரப்பு திட்டவரைபை தயாரிக்க அமைச்சர் மட்டக் குழு பிரித்தானியா பயணம்

(கொழும்பு)

வட-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகசபைத் திட்ட வரைபில் உள்ளடக்கப்படவேண்டிய முஸ்லிம் தரப்புத் திட்டவரைபொன்றினை விரிவாக ஆராய்ந்து தயாரிக்கும் நோக்கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையிலான விஷேட அரசியலமைப்பு விவகாரக் குழுவொன்று எதிர்வரும் 25ஆம் திகதி பிரித்தானியா செல்லவுள்ளது.

பிரித்தானிய வெளிநாட்டு விவகார பொதுநலவாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பிரித்தானியா செல்லவுள்ள மேற்படிக் குழுவினரை, இலங்கைக்கான பிரித்தானிய பிரதித் தூதுவர் பீட்டர் றியூஸ் அழைத்துச் செல்லவுள்ளார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான இக்குழுவில், கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ரீ. ஹஸன் அலி, முன்னாள் சட்டமா அதிபர் ஷிப்லி அஸீஸ், முன்னாள் அரச வழக்கறிஞர் நிஸாம் காரியப்ப, ஹொங்கொங் பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் ஹரீத் ஷபரூல்லா, பாராளுமன்ற உறுப்பினர் கே.எம்.தௌபீக், பிரதமர் அலுவலக முஸ்லிம சமாதான ஆலோசனைப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் எம்.எல்.ஏ.காதர் மற்றும் முன்னாள் அரசியலமைப்பு அமைச்சரின் ஆலோசகர் கலாநிதி ஜயம்பதி விக்ரமரட்ண, சட்டத்தரணி ஏ.எம்.பாயிஸ் உட்பட 13 பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர்.

எதிர்வரும் 25ஆம் திகதி பிரித்தானியாவிற்குப் பயணமாகும் இக்குழுவினர் 29ஆம் திகதி வரை அங்கு தங்கியிருந்து பிரித்தானிய சர்வகட்சி அமைப்பின தலைவரும, நாடாளுமன்ற உறுப்பினருமான பெரி கார்டினர், அதன் செயலாளர் நாயகம் என்.ரி.லவ் மற்றும் சிறுபான்மைச் சமூகத்திற்கான விசுவாச அமைப்பின் முக்கியஸ்தர் மக்பூல் அலி உட்பட பல அரசியல் பிரமுகர்களைச் சந்தித்து இதுவிடயம் குறித்து விரிவாக கலந்து ஆலோசிக்கவுள்ளனர்.

பின்னர் 29ஆம் திகதி அங்கிருந்து ஸ்கொட்லாந்துக்குப் பயணமாகும் இக்குழுவினர், ஸ்கொட்லாந்து அரசியலமைப்புக் கொள்கை விவகார அலகின் தலைவர் கொலின் மிலரைச் சந்தித்து அதிகாரப் பரவலாக்கம், அரசியல் யாப்பு சம்பந்தமான கொள்கைத் திட்டங்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடவுள்ள அதேநேரம், அடுத்த இரு தினங்களும் ஸ்கொட்லாந்து அரசியல்வாதிகள், சட்ட நிபுணர்கள், அரசியல் ஆய்வாளர்கள் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள் ஆகியோருடனும் ஏற்கனவே தாம் தயாரித்துள்ள முஸ்லிம்களின் அபிலாசைகள் தொடர்பான கொள்கைத் திட்டங்கள் மற்றும் சமூக ரீதியான பொலிஸ் பாதுகாப்பு விடயம் குறித்தும் விரிவாக ஆராயவுள்ளனர்.

இதேவேளை, இக் குழுவினர் பிரித்தானியாவில் தங்கியிருக்கும் காலத்தில் இவர்களைச் சந்தித்து, சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் இங்கிலாந்துக்குப் பயணமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தி-18)

# இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதில் உலக நாடுகள் கூடுதலான அக்கறை

### ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி வூட்டோ வில்சன் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த 20வருட கால இனபபிரச்சினை யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கில் சர்வதேச நாடுகள் கூடுதலான அக்கறை செலுத்தி வருகின்றன.

இவ்வாறு அம்பாறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கொன்றில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரதிநிதி வூட்டோ வில்சன் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கும், வடக்கு-கிழக்கு மாகாணத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் உதவிகளை வழங்க முன்வந்துள்ளன.

இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாணப்பட வேண்டுமாயின், அதற்கு ஊடகவியலாளர்கள் பக்கம் சாராது நடுநிலையாக நின்று செயற்படுவது அவசியம்.

வளர்ச்சிஅடைந்த நாடுகளுக்கு ஈடாக இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் பேணப்படுவது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் திருப்தி அடைவதுடன், இச்சுதந்திரம் தொடர்ந்தும் பேணப்படவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

1982ஆம் ஆண்டுமுதல் இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு பேணப்பட்டு வருகின்றது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் நாடுகளில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பனவற்றுக்கு அடுத்த படியாக ஐரோப்பிய- ஒன்றியம் காணப்படுகிறது.

தற்போது கிழகக்கு மாகாண ரயில்வே போக்குவரத்துத் துறையை மறுசீரமைக்கவும், மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்யவும் ஐரோப்பிய ஒன்றியம் 62 மில்லியன் யூரோக்களை வழங்கவுள்ளது எனவும் அவர் அங்கு தெரிவித்தார்.

இவ் ஊடகவியலாளர் கருத்தரங்கில் சுமார் நூற்றுக்கணக்கான தமிழ், முஸ்லிம், சிங்களப் பத்திரிகையாளர்கள் கலந்துகொண்டனர். (உ-60)

### தமிழகத்தில் உள்ள ஈழ அகதிகள் முகாம்களில்

# பிறப்புச் சான்றிதழ் இன்றி 17 ஆயிரம் சிறார்கள்

(கொழும்பு)

தமிழகத்தில் உள்ள 103 ஈழத் தமிழகதிகள் முகாம்களில் கடந்த 20வருட காலத்தில் பிறந்த சுமார் 17ஆயிரம் சிறுவர்கள், இலங்கைப் பிரஜைகள் என்பதை உறுதிப்படுத்துவதற்கான பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாத நிலையில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சிறுவர்களது பிறப்புப் பதிவுகள், இலங்கை பிரஜாவுரிமைகள் சட்டப்பிரகாரம் மேற்கொளளப்பட வேண்டியதாக இருக்கின்ற போதும், அதற்கான ஏற்பாடுகள் எதுவும் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் கடந்த 20 வருட காலமாக இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தினால், தமது உயிரைப் பாதுகாக்கும் பொருட்டு தமிழகம் சென்ற இவர்கள் தற்போது தாய்நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர்.

தமிழக அரசின் நிவாரண உதவிகள் எதையும் பெற்றுக்கொள்ளாத நிலையில் சுமார் ஒரு லட்சம் ஈழத் தமிழர்கள் தமிழகத்தின் பல இடங்களிலும் செறிந்து வாழ்வதாகவும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. (உ-10)

# பாதாளச் சிறைகளில் இலங்கையர் தடுத்துவைப்பு

(கொழும்பு)

லெபனானில் உள்ள பாதாளச் சிறைகளில் 213 இலங்கையர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை விசா அனுமதி இன்றி தங்கியிருந்தமையினாலேயே இவர்கள் சிறைவாசம் அனுபவித்து வருவதாகவும், இவர்களில் 153 பெண்களும் 60ஆண்களும் அடங்குவதாகவும் வெளிநாட்டு நலன்புரி அமைச்சர் லக்ஷ்மன் யாப்ப அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

தற்போது லெபனானிற்கு சென்றிருக்கும் இவர் அங்குள்ள பாதாளச் சிறைகளை நேரில்சென்று பார்வையிட்டுள்ளதுடன் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் நலன்கள் மற்றும் பெயர் விபரங்களையும் கேட்டறிந்து கொண்டாா.

இவர்கள் அனைவரையும் விரைவில் இலங்கைக்கு அழைத்து வருதற்காக தூதரக மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும் இவர் கூறியுள்ளார்.

இதேவேளை அண்மையில் லெபனானில் ஏற்பட்ட விபத்தில் மரணமடைந்த 7இலங்கையர்களின் சடலங்களும் லெபனான் வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் அச்சடலங்கள் மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்து இருப்பதால் அவற்றை இலங்கைக்கு அனுப்ப முடியாது எனக் குறிப்பிட்ட அமைச்சர் இது குறித்து சம்பந்தப்பட்ட உறவினர்களுக்கு அறிவித்துள்ளார். (உ-10)

## தினசரி தியானம்

### சொன்ன சொல்

சொன்ன சொல்லை எப்போதும் காப்பாற்ற வேண்டும். இது தான் இவ்வுலக வாழ்க்கை. ஆன்மீக வாழ்க்கையின் வெற்றிக்கு வழி.வாழ்க்கையில் தடைகள் ஏற்படக்காரணம் நீங்கள் சொன்ன சொல்லை காப்பாற்றாததே ஆகும். இதில் தவறுவது உங்கள் வாழ்க்கைப் பாதையில் ஏராளமான இடர்பாடுகளை ஏற்படுத்தும். நண்பர்கள் பகையாவார்கள். ஆன்மீக வாழ்க்கையில் பல முடிவுகளை எடுக்கிறீர்கள். ஆனால் ஒன்றிலும். நிலைப்பதில்லை. முக்கிய ஒழுக்கமான சொன்ன சொல் தவறாமையை வளர்க்காவிட்டால் வாழ்க்கையில் முன்னேற்றமோ, வெற்றியோ கிடைக்காது.

சுவாமி சிவானந்தர்

# மாணவர்கள் பண்படுவதற்கு கலைகள் வழிவகுக்கின்றன

### மெற்றாஸ்மயில் தெரிவிப்பு

(குப்பிளான்)

பாடசாலை மாணவர்கள் நல்லவர்களாக, வல்லவர்களாக வளர்வதற்கு கலைகளும், விளையாட்டுக்களும் மிகவும் இன்றியமையாதன என பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத் தலைவரும் தீவக வலயக்கல்வி அலுவலக நிர்வாக உத்தியோகத்தருமான செ.மெற்றாஸ்மயில் தெரிவித்துள்ளார்.

அனலைதீவு அபிவிருத்தி இளைஞர் கழகத்தினால் கனடா வாழ அனலைதீவு மக்கள் கலாசார ஒன்றியத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட கலைவிழா மற்றும் பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்ட கருத்தை தெரிவித்தார்.

மேலும் கூறுகையில்,

கலைகளும் விளையாட்டுக்களும் மாணவர்களுக்கு கல்வியைப் பெருககும் பயிற்சியாக அமைகின்றன. இவற்றினால் நல்லுணர்வு, நல்மனம் என்பவற்றை மாணவர்கள் பெறுகிறார்கள். குழந்தை பிறந்தவுடன தாய்மார் தாலாட்டுப் பாடுகிறார்கள். பின்னர் கைவீசம்மா கைவீசு என்று பாடுகிறார்கள் இவை மாணவர்களுக்கு நல்ல உடற்பயிற்சியாக அமைகின்றன. தமிழர் கலைகளுள் ஒன்றான பாரம்பரிய கலைகளினால் மாணவர்கள் நல்ல குருவைப் பெறுகிறார்கள். மற்றவர்களுடன் சிறந்த முறையில் பழகுகிறார்கள். இதனால் மாணவர்களுக்கு ஆடுவதும், பாடுவதும் கட்டாயம் தேவை என்று குறிப்பிட்டார். (உ-20)

# வரவு-செலவுத் திட்டத்தில் ஓய்வூதியர்களுக்கு முதலிடம்

### பிரதி நிதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டுக்கான பனமுகபடுத்தப்பட்ட வரவு -செலவுத் திடடத்தில் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் மற்றும் சிறுவர்கள் குறித்து கூடிய கவனம் செலுத்தப்படும் என பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடாபாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இவ் வரவு -செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு, தனது யோசனைகளை அடுத்த மாதம் 7ஆம் திகதி கையளிக்கவுள்ளது.

அதன் பின்னர் அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்குறித்து கூடிய கவனம் செலுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.(தி-61)

# பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் தொடர்ந்தும் இழுபறிநிலை

(கொழும்பு)

தற்போது பொலிஸ்மா அதிபர் பதவியில் நிலவும் வெற்றிடம் காரணமாக பொலிஸ் திணைக்களத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதில் பெரும் சிக்கல்கள் எழுந்துள்ள நிலையில் நிரந்தரப் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமனம் செய்வதற்கு இன்னும் 3வார காலம் எடுக்குமென அரசியல் அமைப்புச் சபை தகவல் வெளியிட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு 4 சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்களின் பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டுள்ள போதிலும் அவர்களின் சிரேஷ்டத்துவம் சம்மந்தப்பட்ட அறிக்கைகள் எதனையும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு அரசியலமைப்புச் சபைக்கு அனுப்பி வைக்கவில்லை.

இந்த நிலையில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சநதிரா பெர்னாண்டோ அனுப்பி வைத்துள்ள விபரங்களில் போதுமானளவு விபரத்திரட்டுக்கள் இன்மையால் சரியான விபர அறிக்கைகளை மீண்டும் தமக்கு அனுப்பி வைக்குமாறு பொலிஸ் ஆணைக்குழு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

இதன் பிரகாரம் விபரமான அறிக்கைகளைத்திரட்டி அனுப்புவதற்கு தனக்கு இன்னும் இரண்டு வார கால அவகாசம் தேவைப்படுமென சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சந்திரா பெனாண்டோ தெரிவித்துள்ளதை அடுத்தே நிரந்தரப் பொலிஸமா அதிபர் ஒருவரை நியமிப்பதற்கு 3வார காலமாகும் எனத் தெரிய வருகிறது.

அதேவேளை பதவிப்போட்டி மற்றும் சிரேஸ்டத்துவம் சம்மந்தமான இழுபறிநிலை காரணமாகவே நிரந்தரப் பொலிஸ்மா அதிபரை நியமிப்பதில் தாமதம் ஏற்பட்டு வருவதாக பொலிஸ் ஆணைக்குழு வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. (தி-18)

## புலிகளுக்கு...

மான இக் கப்பல் நின்ற இடங்கள் பற்றி தமது ராடர் திரையில் தென்பட்டதாக அவ்விடத்தைக் கண்காணித்த கடற்படைக் கலங்கள் தெரிவித்தன.

ஜூன் 14 அன்று புலிகளின் கப்பல் கடலுக்குள் அமிழ்த்தப்பட்டதன் பின்னர் கண்காணிப்புக்குழுவினரின் உதவியின்றி எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கக் கூடாதென்று பாதுகாப்புச் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ கடற்படைத் தளபதிக்கு எழுத்துமூலமான உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

இதன்படி திருகோணமலையில் உள்ள கண்காணிப்புக்குழுவினரின் அலுவலகத்திற்கு இத்தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனேயே திருகோணமலை டொக்யாட்டில் இருந்து புறப்பட்ட பீரங்கிப்படகு ஒன்றில் கண்காணிப்புக்குழுவின் உறுப்பினர் ஒருவரும் ஏற்றிச் செல்லப்பட்டார். படகில இருந்தவாறே கண்காணிப்புக் குழு உறுப்பினர் தமது தலைமையகத்திற்கு இது பற்றிய விபரங்களை அறிவிக்க தலைமையகம் பாதுகாப்புச் செயலாளர் ஒஸ்ரின்பெர்ணான்டோவுடன் தொடர்பு கொண்டது.

புலிகளின் ஆயுதக் கப்பலை முடக்கும் நடவடிக்கைகளில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர் என்ற செய்தி சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் பரவின. இதனால் குறித்த இடத்தில் இருந்து புலிகளின் கப்பல் மறைந்து விட்டது என்றும் ஜனாதிபதிக்கு அனுப்பிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ந-6)

## தமிழ்க்கூட்டமைப்பு...

தமிழ்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடனான இச் சந்திப்பின் போது, இடைக்கால நிர்வாகசபை தொடர்பான விடுதலைப் புலிகளின் யோசனைகள் உட்பட மற்றும் பலதரப்பட்ட விடயங்கள் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சந்திப்பு கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பணிமனையில் 22-ம் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறுமென விடுதலைப புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்ரர் தெரிவித்துள்ளார். (வ)

## விடுதலைப்...

யான பொலிஸ், நீதிமன்றம், வங்கிகள், வரிவிதிப்பு நடவடிக்கைகள் மூலம் புதிய அரசொன்றை வடக்கு கிழக்கில் அமைத்துள்ளனர். அத்துடன் ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கோ, சிங்கள, முஸ்லிம் சமூகத்தவர்களுக்கோ பிரதிநிதித்துவத்திற்கு இடமளிக்காமல் தாமே தனியாக இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுதத விரும்புகிறார்கள். இதனை அரசாங்கம் கண்டும் காணாதது போல் விட்டுவிடுகிறது.

விரைவில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். எந்தளவு இரக்கமற்றவர்களாக விடுதலைப் புலிகள் இருப்பினும் அவர்களுடன் பேசியேயாக வேண்டும். யுத்தம் தீர்வல்ல. சமாதானப் பேச்சுக்கள் பற்றி அரசாங்கம் தன்னை இருட்டிற்குள்ளே வைத்திருக்கின்றது.

ஒரு சில அமைச்சர்களைத் தவிர அமைச்சரவைக்கோ, ஏனைய அமைசசர்களுக்கோ பொது மக்களுக்கோ இது பற்றி எதுவும் தெரியாது. நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி என்ற வகையில் சமாதானப் பேச்சுக்கள் பற்றி நானே இறுதி முடிவையெடுப்பேன். அதேவேளை அரசியல் யாப்பு விடயத்திலும் மிகத் தெளிவாகவுள்ளேன் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ந)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆண்டு 1 இல் இருந்து O/L வரை எல்லாப் பாடங்களும் சிறந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது. புதிய பதிவுக்கு தலைமை ஆசிரியர், 426(302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். [7677]

# பேச்சுக்களில் முஸ்லிம் தனித்தரப்பா? பாராளுமன்றில் நாளை விவாதம்

(கொழும்பு)

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் எதிர்வரும் காலங்களில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தரப்பில் தனியான பிரதிநிதிகள் குழு கலந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கான விவாதம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை பாராளுமன்றத்தில் நடை பெறவுள்ளது.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை மீதான பாராளுமன்ற விவாதம் எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றுகையில் ஈராக் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பினை நியாயப்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டியுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி இது தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதம் ஒன்றை நடத்த வேண்டு என சபாநாயகரிடம் கோரியிருந்தது.

இதற்கிணங்க இந்த விவாதத்திற்கான அனுமதியை சபாநாயகர் வழங்கிருந்தார்.

இதேவேளை பிரதமரின் ஐக்கிய நாடுகள் சபை உரையைக் கண்டித்து பிரதமரிற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையினைக் கொண்டுவர பொதுஜன ஐக்கிய முன்னணி நடவடிக்கை எடுத்தபோது கட்சிக்குள் கருத்து முரன்பாடுகள் ஏற்பட்டது எனவும் இதனையடுத்தே பிரதமரிற்கு எதிரான விவாதத்தினை நடத்த பொதுஜன ஐக்கிய முன்னணி நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தி-10)

# மணற்காட்டுப் பகுதியில் புதிதாகப் படைமுகாம்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் உள்ள தனியார் ஒருவரின் காணியில் இராணுவத்தினர் புதிதாக படைமுகாம் ஒன்றை அமைத்து வருகின்றனர்.

மணற்காட்டுப் பகுதியின் கரையோரங்களில் ஏற்கனவே பல படைமுகாம்கள் இருக்கின்ற போதிலும் புதிய முகாம்களை படையினர் அமைத்துவருவதுடன் பழைய முகாம்களை விஸ்தரித்தும் வருகினறனர்.

இதேவேளை மணற்காடு சவுக்கங்காட்டுப் பகுதிக்குப் பெண்களை விறகு எடுப்பதற்கு வரவேண்டாமென இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

இராணுவத்தினரால் ஏற்படும் விபரீதங்களைத் தடுப்பதற்காகவே இந் நடவடிக்கையினை மேற்கொணடுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது. (ந-43)

## முஸ்லிம் பிரதிநிதிகள் புலிகளுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா பட்டானிச்சூர் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பில்,

இரண்டு தரப்பினருக்குமிடையிலான நல்லுறவை மேம்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டதாக வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார் (ந-5)

# முஸ்லிம் எம்.பிக்களின் ஒன்றியம் கூட்டமைப்புடன் இன்று சந்திப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்திற்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்குமிடையே விஷேட சந்திப்பொன்று இன்று இரவு கொழும்பில் இடம் பெறவுள்ளது.

இச் சந்திப்பில், அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம் பெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம் பிரதிநிதிகள் தனித்தரப்பாகக் கலந்து கொள்ள வேண்டுமென்ற ரீதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக ஒன்றியத்தின் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெறவுள்ள இச் சந்திப்பின் போது இடைக்கால நிர்வாக சபை வடக்குக் கிழக்கு மாகாணத்தின் தற்போதைய சூழ்நிலை தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளது.

இதேவேளை 21-ம் திகதி செவ்வாய்க்கிழமை சமாதானப் பேச்சில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்து கொள்ள வேண்டுமென்ற பிரேரணை பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## குன்னக்குடி...

எம்.ஜி.ஆரின் வேண்டுகோளுக்கமையவே அவர் இவ்வாறு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தீபாவளித் தினத்தை முன்னிட்டு தீபாவளிச் சிறப்பு முத்திரை ஒன்றும் தபால் திணைக்களத்தினால் துர்க்கா மணி மண்டபத்தில் அன்றைய தினம் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.(த)

## எந்தவொரு...

அதன்பின்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

இலங்கையில் நிலவுகின்ற பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை ஆகும. அதனை இலங்கை மக்களே தமக்குள் பேசித்தீர்த்துக் கொள்ள வேண்டும். பிரச்சினைக்குரிய தீர்வுக்கான ஆலோசனைகளையும் ஒத்துழைப்புக்களையும் சர்வதேச சமூகம் வழங்கும். இந்நிலையில் அடுத்த கட்ட பேச்சுக்களின் போது சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு மேலும் அதிகரித்துக் காணப்படும்.

இலங்கையைப் போல் பல்லினச் சமூகம் வாழும் ஒருநாட்டில் ஒரு சமூகம், மற்றொரு சமூகத்தில் தங்கி வாழ்வது இயல்பாகும். எனினும் எந்தவொரு நாட்டிலும் பெரும்பான்மை இனம், சிறுபான்மை இனத்தை அடக்கி ஆள முற்படுவதை சர்வதேசம் ஒரு போதும் அங்கீகாிக்க மாட்டாது என்று கூறிய வோல்ட வூட்டர் இலங்கையின் இனபிரச்சினை தர்வு விடயத்தில் எந்தவொரு தீர்வையும் சர்வதேச சமூகம் பலாத்கார மாகத் திணிக்க மாட்டாது என்றும் உறுதிபடத் தெரிவித்தார். (ம)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் தில்லையம்பலம்

(மருதடி, காரைநகர்)

ஆறுமுகம் தில்லையம்பலம் நேற்றுக் காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக இன்று மாலை 4 மணிக்கு காரைநகர் தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மருதடி, காரைநகர். [c/6758]

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## MEDICAL CHECK UP

## வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## உங்கள் வலம்புரியின் வாரமலர்

## சங்குநாதம்




பிரித்(து) ஓதுகிறார்
அஸ்கிரிய பீடாதிபதி

பொலிஸ்மா அதிபர்மீது ஜனாதிபதிக்கு
ஏன் இந்தக் கோபம்?

முஸ்லிம்கள் தனித்தரப்பு
அரசு சம்மதம் - புலிகள் மறுப்பு

தமிழகத்தில் விபத்து
ஈழத்தமிழர் ஐவர் பலி

வியாசரின் பதில்கள்
ஆலடி மாநாடு
பொன்.கணேசமூர்த்தியின்
கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

விலை ரூபா 14/-

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள்
உள்ளங்களில் ஒலிப்பது
சங்குநாதம்

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.10.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.